Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, NOVEMBER 05, 2023

செவ்வாய்க்கிழமை நவம்பர் 05, 2024 | ஒளி: 10 கதிர்: 086 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE




## விலைகளில் திருத்தம் இல்லை

லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் மற்றும் லாஃப்ஸ் கேஸ் பிஎல்சி ஆகியவை சமீபத்திய எரிபொருள் விலைத் திருத்தத்திற்கு அமைவாக, 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டரின் சில்லறை விலையை மாற்றியமைக்காது என அறிவித்துள்ளன.



## பொதுத் தேர்தல் திகதி மனு தள்ளுபடி

நவம்பர் 14ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்தும் முடிவை எதிர்த்துத் தொடரப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை நீண்ட காலமாகப் பரிசீலித்ததன் பின்னரே இந்த உத்தரவை உயர்நீதிமன்றம், திங்கட்கிழமை (04) பிறப்பித்துள்ளது.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாமே இந்த மனுவை நிராகரித்துள்ளது.

முறையான விசாரணைக்குச் செல்லாமல் மனுவைத் தள்ளுபடி செய்வதாக உயர் நீதிமன்றம் தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

சிவில் அமைப்பின் செயற்பாட்டாளரும், ‘நாம் இலங்கை தேசிய அமைப்பின்’ அழைப்பாளருமான எச்.எம்.பிரியந்த ஹேரத் தாக்கல் செய்த மனுவில், சட்டமா அதிபர், ஜனாதிபதியின் செயலாளர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.



## “5/6 வேண்டாம்”

எதிர்க்கட்சியைச செயலிழக்கச் செய்யும் வகையில், பாராளுமன்றத்தில் ஐந்தில் ஆறு (5/6) பெரும்பான்மையைப் போன்று வரம்பற்ற அதிகாரத்தைத் தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்கவில்லை என தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் டில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தடையுமின்றி அரசாங்கத்தை நடத்துவதற்குப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை மட்டுமே தேசிய மக்கள் சக்தி எதிர்பார்க்கிறது என கொழும்பில், திங்கட்கிழமை(04) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2



## “ஜனாதிபதி வினோதம் காட்டுகின்றார்”

உகண்டா நாட்டுக்கு திருடர்கள் கொண்டு சென்ற பணத்தை மீண்டும் நாட்டுக்கு கொண்டு வருவேன் என கூறிய ஜனாதிபதி, இன்று நாட்டுக்கு விநோதங்களைக் காட்டிக்கொண்டிருக்கிறார் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எமது நாட்டிலிருந்து திருடப்பட்ட பணத்தையும், உகண்டாவில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள பணத்தையும் மீளப்பெற்று, மக்கள் விடுதலை முன்னணி அரசாங்கத்தில் அந்தப் பணத்தைப் பயன்படுத்தி, எமது நாடு எதிர்நோக்கும் பாரதூரமான பிரச்சினைகளுக்குத் தீர்வை தருவோம் என தற்போதைய ஜனாதிபதி உள்ளிட்ட ஆளும் தரப்பினர் கடந்த காலங்களில் பிரஸ்தாபித்தனர்.

தொடர்ச்சி P2



## லொஹானின் மனைவிக்கு விளக்கமறியல் உத்தரவு

உதிரிபாகங்களைக் கொண்டுவந்து, அவற்றின் ஊடாக தயாரித்த பல கோடி ரூபாய் பெறுமதியான அதிசொகுசு வாகனத்தை சட்டவிரோதமான முறையில் வீட்டுக்குள் மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளன முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் மனைவி ராஷி பாபா ரத்வத்த, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## கருணா- பிள்ளையான் ஆதரவாளர்கள் கைகலப்பு

### மூவர் படுகாயம்; 4 பேர் கைது

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் கருணா அம்மான் தலைமையிலான கட்சியின் வேட்பாளர் மற்றும் ஆதரவாளர்களுக்கும் பிள்ளையான் தலைமையிலான கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பில், மூவர் படுகாயமடைந்துள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காயமடைந்த கருணா அம்மானின் கட்சி வேட்பாளர் ஒருவர் உட்பட 3 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (3) இரவு இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



## “சுமந்திரனுக்கு அடிமையாகி அரசியல் செய்ய மாட்டேன்”

■ எஸ்.ஆர்.லெம்பேட்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் உண்மைக்குப் புறம்பாக தனக்கு எதிராக அவதூறு பரப்பும் வகையில் கருத்துக்களை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றில் வெளியிட்டமை தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாக தெரிவித்தார்.

மன்னார் தமிழரசு கட்சி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை(03) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

மதுபானசாலைக்கு தான் சிபாரிசு கடிதம் வழங்கியதாகவும் அதை நான் வெளிப்படையாக ஒப்புக் கொண்டதாகவும் உண்மைக்குப் புறம்பான கருத்தை எனக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சுமந்திரன் கூறியிருந்தார் .

இந்த கருத்தை அவர் கூறிய சமயம் நான் இந்தியாவில் இந்தமையினால், உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை. மன்னாருக்குத் திரும்பியவுடன், பொலிஸ் நிலையத்தில் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளேன்.

தொடர்ச்சி P2

## ‘அஸ்வசும’ நன்மைகளை இழந்தோர் உள்ளனர்

சமுர்த்திப் பயனாளர்களாகப் பயன்பெற்றுவருகின்ற, ‘அஸ்வசும’ நலன்புரித்திட்ட நன்மைகளை இழந்த, ஆனால், உண்மையிலேயே பயனடையவேண்டிய பெரும் எண்ணிக்கையிலானோர் இருப்பதாக, கிடைக்கப் பெற்ற தகவல்கள் மற்றும் கோரிக்கைகளின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்களிடம் சம்பந்தப்பட்ட அமைச்சு மேற்கொண்ட விசாரணைகளிலும் சிக்கல் நிலைகள் காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## தங்க இரசாயனத்தை குடித்த குழந்தை பலி



தீபாவளி பண்டிகையைக் கொண்டாடுவதற்காக உறவினர் வீட்டுக்குச் செல்லவிருந்த இரண்டு வயதும் பதினொரு மாதங்களேயான ஆண் குழந்தையொன்று தனது தந்தைக்குச் சொந்தமான தங்கத்தை மெருகூட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் இரசாயன திரவத்தை (கொப்பர் அமிலம்) குடித்து உயிரிழந்துள்ளதாக கம்பளை கலஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலஹா தெல்தோட்டையைச் சேர்ந்த பிரதீபன் ரத்னீஸ் என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

தொடர்ச்சி P2

## “அமைச்சுப் பதவிகளுக்காக வாக்களித் தேவையில்லை”



தமிழரசுக் கட்சியை தந்தை செல்வா, அமைச்சுப் பதவிகளுக்காக உருவாக்கவில்லை, அமைச்சுப் பதவிகளுக்காக தமிழர் விடுதலை கூட்டணி உருவாகவில்லை, அமைச்சுப் பதவிகளுக்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தலைவர் ஆரம்பிக்கவில்லை.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# “5/6 வேண்டாம்”

எந்தவொரு கட்சிக்கும் அதீத அதிகாரம் வழங்கப்படக் கூடாது என தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திசாநாயக்க முன்னொரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்த கேள்விக்குப் பதிலளித்த சில்வா, தேசிய மக்கள் சக்தி, இப்போதும் அதே கருத்தில் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

மேலும், “எதிர்க்கட்சியை செயலிழக்கச் செய்யும் 5/6 பெரும்பான்மையைப் போல நாங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்த தேவையில்லை. ஆனால், அரசாங்கத்தை நடத்துவதற்குப் பாராளுமன்றத்தில் பலமான பெரும்பான்மை தேவை. அரசாங்கம் சட்டங்களை இயற்றவும் சட்டங்களைத் திருத்தவும் வேண்டும். பலமான பெரும்பான்மை தேவை” என்றும் தெரிவித்துள்ளார்.



# “ஜனாதிபதி வினோதம் காட்டுகின்றார்”

மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தினர். உகாண்டாவுக்கு எடுத்துச் சென்ற பணம் திரும்பக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்பிக்கையோடு காத்துக் கொண்டிருக்கிறோம். திருடிய பணத்தை நாட்டுக்குக் கொண்டு வந்து நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார்கள் என கருதினாலும், ஜனாதிபதி தலைமையிலான ஜே.வி.பி. அரசாங்கம் நாட்டுக்கு நகைச்சுவைகளை வழங்கி வருகிறது. நகைச்சுவைகளைக் காட்டி நாட்டை கொண்டு நடத்த முடியாது என்றார்.

அவிசாவளை ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதேச கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று ஞாயிற்றுக்கிழமை (03) நடைபெற்றது. இதன்போது, அந்த தொகுதியின் அமைப்பாளர் சுதத் விக்ரமரத்னவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், தேர்தல் மேடைகளில் கடவுச்சீட்டுக்கான வரிசைகளை நிறுத்துவோம் என்று வீராப்பு பேசினர். இன்னும் நிலையான தீர்வை வழங்கவில்லை. MMS, WhatsApp மூலம் செய்திகள் வந்தாலும், அதனால் பிரயோக ரீதியாக எந்தப் பயனும் இல்லை. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் கடவுச்சீட்டு வரிசைக்குத் தீர்வை வழங்காது, வரிசையை நீடிக்கவே நடவடிக்கை எடுத்துள்ளனர். இங்கு மக்கள் எதிர்பார்த்த முறைமை மாற்றத்தால் இந்த கடவுச்சீட்டு வரிசைக்கு இந்த அரசாங்கம் தீர்வை முன்வைக்கவில்லை. முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்து வந்த முறையையே இவர்களும் பின்பற்றி வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார்.



# லொஹானின் மனைவிக்கு விளக்கமறியல் உத்தரவு

அவர், பத்துநாட்களுக்கு பின்னர், தன்னுடைய சட்டத்தரணியின் ஊடாக, நுகேகொடை கங்கொடவில பிரதான நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (04) ஆஜரானார். இதன்போதே, எதிர்வரும் 7ஆம் திகதி வரையிலும் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு பிரதான நீதவான் ருவினி ஜயவர்தன உத்தரவிட்டார்.

ராஷி பாபா ரத்வத்தவை கைது செய்வதற்காக, மிரிஹான பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் மஞ்சுள துஷார், தன்னுடைய கண்காணிப்பின் கீழ், இரண்டு பொலிஸ் குழுக்களை நியமித்திருந்தார்.

சட்டவிரோதமாக வாகனத்தை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, கண்டி, கட்டுகஸ்தோட்டையில் ஒக்டோபர் 31ஆம் திகதியன்று கைது செய்யப்பட்டார். அவர், நுகேகொடை நீதிமன்ற மேலதிக நீதவான் சஞ்ஜய விஜேசிங்ஹ முன்னிலையில், முன்னிறுத்திய போது, அவரும், எதிர்வரும் 7ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த அவர், கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சரின் மனைவி ராஷி பாபா ரத்வத்தவுக்கு சொந்தமான கராஜ் ஒன்றில் வைத்துப் பல கோடி ரூபாய் பெறுமதியான சொகுசு காரை பொலிஸார் கைப்பற்றியதையடுத்து, கடந்த 26ஆம் திகதி லொஹான் ரத்வத்த குடும்பம் காணாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

# தங்க ரசாயனத்தை குடித்த குழந்தை பலி

குழந்தையின் தந்தை ராஜாமணி பிரதீபன் (வயது 38) தெல்தோட்டையில் தங்க வியாபாரம் செய்து வருகிறார். இவரது மனைவி அல்லிராணி (வயது 30) தனது மூன்று குழந்தைகளுடன் தீபாவளியைக் கொண்டாடுவதற்காக உறவினர் வீட்டுக்குச் செல்வதற்காக மாலை ஐந்து மணியளவில் இந்த வணிக வளாகத்திற்கு வந்தார்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது, அருகில் இருந்த தங்க பொருட்களைச் சுத்தம் செய்யப் பயன்படுத்திய ‘கொப்பர்’ அமிலம் சிறு குழந்தை குடித்தது. உடனே குழந்தை தரையில் விழுந்துள்ளது. குழந்தையை தெல்தோட்டை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். தெல்தோட்டை வைத்தியசாலையின் வைத்தியர்கள் குழந்தையைக் காப்பாற்றுவதற்கு கடுமையாக முயற்சித்த போதிலும், சிறிது நேரத்திலேயே குழந்தை உயிரிழந்துள்ளது.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக பேராதனை போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டதுடன், நிபுணர் சட்ட வைத்திய அதிகாரி ஆர்.பி.ஜெயசூரியவினால் வெளிப்படையான தீர்ப்பு நவம்பர் 2ஆம் திகதியன்று வழங்கப்பட்டது. பின்னர் அன்றைய தினம் உடல் டெல்தோட்டை வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு மாலையில் அடக்கம் செய்யப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சமன் குணசேகரவின் பணிப்புரையின் பேரில் பொலிஸ் சார்ஜன்ட் ரத்நாயக்க, விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கருணா– பிள்ளையான் ஆதரவாளர்கள் கைகலப்பு

மட்டக்களப்பு ஜெயந்திபுரம் பாடசாலை வீதியில் ஜனநாயக முன்னணி கட்சியான கருணா அம்மானின் கட்சியின் வேட்பாளரின் காரியாலயத்தின் முன்பாக உள்ள வீதியில் ஆதரவாளர்கள் பேசிக் கொண்டிருந்துள்ளனர்.

இந்த நிலையில், அந்த பகுதிக்கு வந்த பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் அறுவர் கொண்ட குழுவினர், அங்குள்ள மதில்களில் ஒட்டப்பட்டிருந்த கருணா அம்மானின் கட்சி வேட்பாளர்களது சுவரொட்டிகளுக்கு மேல் பிள்ளையானின் கட்சி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

அங்கிருந்த கருணாவின் வேட்பாளர், எங்கள் சுவரொட்டிகளுக்கு மேல் உங்கள் சுவரொட்டிகளை ஒட்ட வேண்டாம் என தெரிவித்த நிலையில் இரு கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டுக் கைகலப்பாக மாறியுள்ளது என விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

கருணாவின் கட்சி வேட்பாளர் முனிசாமி நாகேந்திரன் மற்றும் அவரது ஆதரவாளர் இருவர் உட்பட 3 பேர் படுகாயமடைந்தனர். பிள்ளையான் கட்சி ஆதரவாளர்கள் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர் இதனைத் தொடர்ந்து படுடைந்தவர்களை மட்டு. போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்றவகையில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# “அமைச்சுப் பதவிகளுக்காக...

எனவே, அமைச்சுப் பதவிக்காகத் தமிழரசு கட்சிக்கு எவரும் வாக்களித் தேவையில்லை என முன்னாள் ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினருமான பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அமைச்சு பதவியையிட்டு பரிசீலிக்கலாம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியிருப்பது குறித்து கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001, தொடக்கம் 2015 வரை அனைத்து பாராளுமன்றத் தேர்தல்களில் 15, 22,15 மற்றும் 16 ஆசனங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கிடைத்தன. தமிழ்த் தேசியம் உறுதிப்படுத்தப்பட்டது.

ஆனால், 2015இல் நல்லாட்சி அரசில் 16, ஆசனங்கள் கிடைத்தன. எதிர்க்கட்சி தலைவர் பதவியும் எமக்குக் கிடைத்து. அதில் இணக்கப்பாடு அரசியல், அபிவிருத்தி அரசியல் என்று வடக்கு, கிழக்கில் எட்டு நிர்வாக மாவட்டங்களிலும் அபிவிருத்தி குழு தலைவர் பதவிகள் கிடைத்தும் பாரிய அபிவிருத்திகள் வேலைவாய்ப்புகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னெடுத்தும் என்ன நடந்தது?

அதன் பிரதிபலிப்பு 2020, பொதுத்தேர்தலில் 16, ஆசனங்கள் 10, ஆகக் குறைந்தது, அதற்கான மூலகாரணம் அரசுடன் சோரம் போனதால்தான் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்.? சும்மா கிடந்த கஜேந்திரகுமார் சைக்கிள் கட்சிக்கு இரண்டு ஆசனமும், விக்கினேஸ்வரனுக்கு ஒரு ஆசனமும் 2020 இல் யாழ். மாவட்ட தமிழ்த் தேசிய கொள்கையுள்ளவர் வாக்களித்து எமது ஆதரவைக் குறைத்தனர் அல்லவா? அமைச்சுப் பதவிக்காக, சலுகை அரசியலுக்காக, பதவிக்காக எனில், தமிழரசு கட்சிக்கு எவரும் வாக்களித் தேவையில்லை என்றார்.

அனுரவின் திசைக்காட்டிக்கும், பிள்ளையானின் படகுக்கும், மோகனின் மாட்டுக்கும், டக்ளசின் வீணைக்கும், அங்கஜனின் தபால் பெட்டிக்கும், உமாசந்திர பிரகாஷின் ரெலிபோனுக்கும் இதர அரச கைக்கூலி கட்சிகளுக்கும் வாக்களிக்கலாம். அந்த கட்சிகளுக்கும் எமது தமிழரசுக் கட்சிக்கு வாக்களிப்பதற்கும் என்ன வித்தியாசம். சுமந்திரன் விரும்பியபடி கதைப்பதெல்லாம் மரக்கட்டைகளான சிலர் கேட்டுத் தலையாட்டலாம். ஆனால், மக்களுக்குத் தெரியும். தேர்தல் விஞ்ஞாபனம் இதுவரை வெளியிடவில்லை, அஞ்சல் மூல வாக்களிப்புக்கு முன்னர் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட முடியாமல் நாம் உள்ளோம் என்றார்.

சிலவேளை, சுமந்திரன் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அமைச்சுப் பதவி, அபிவிருத்திகளைப் பற்றிக் குறிப்பிட்டாலும் ஆச்சரியம் இல்லை. மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சிக்கு இம்முறை கட்டாயம் மூன்று ஆசனங்கள் கிடைக்கும். சுமந்திரனின் இவ்வாறான கருத்துகளால் தான் பாதிப்பு ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# “சுமந்திரனுக்கு அடிமையாகி அரசியல் செய்ய மாட்டேன்”

புலம்பெயர் தமிழர்கள் பலர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் சந்திப்பை மேற்கொள்வதற்கான உதவிகளைக் கோரிய போது, அவர்களின் தேவைகள் நிமித்தம் நான் அந்த சந்திப்புக்களை மேற்கொள்வதற்கான உதவிகளைச் செய்து கொடுத்தேன். அவ்வாறு சந்தித்தவர்களில் தனிப்பட்ட பழக்கத்தின் காரணமாக யாரும் அந்த வாய்ப்பை பயன்படுத்தி மதுபான சாலைகள் அமைப்பதற்கான அனுமதியைப் பெற்றிருந்தால் நான் அதற்குப் பொறுப்பாக முடியாது.

நான் அண்மையில் ஒரு ஊடகவியலாளரின் கேள்விக்குப் பதிலாக வழங்கியிருந்தேன். ஆனால், சுமந்திரன் அவர்கள் உண்மைக்குப் புறம்பாக நான் எழுத்து மூல சிபாரிசு வழங்கியதாகவும் அதை ஒத்துக் கொண்டதாகவும் சொன்ன கருத்தை வன்மையாகக் கண்டிப்பதோடு, பொலிஸார் குறித்த விடயத்தில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கோரிக்கை விடுத்தேன்.

அதனால் தான் தனக்கு இம்முறை ஆசனம் வழங்கவில்லை என சுமந்திரன் குறிப்பிடுவதாகும் அது முற்றிலும் பொய் என்றும் 2020ஆம் ஆண்டில் இருந்தே கட்சியில் செயற்பாடுகளில் இருந்த அதிருப்தி காரணமாக, உளவியல் ரீதியாகக் கட்சியோடு, பயணிப்பதா? இல்லையா ? என்ற மனநிலை இருந்து வந்ததாகவும் அதே நேரம் எனது சுயவிருப்பத்தினாலும் உடல் நல பிரச்சினைகளாலும் இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க வேண்டும் என்பதாலும் நானாக மேற்கொண்ட முடிவே அதுவாகும் என்றார்.

குறிப்பாக சுமந்திரன் 2020ஆம் ஆண்டுக்குப் பிறகு விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்துக்களைத் தொடர்ந்து தெரிவித்து வந்த நிலையில் அவருக்கு எதிராகத் தான் சம்பந்தன் அவர்களுக்குக் கடிதம் எழுதியதாகவும் சுமந்திரன் ஒரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவருக்கு எக்காரணம் கொண்டும் கட்சியின் பதவி நிலைகள் வழங்கக் கூடாது எனவும் எழுத்து மூலமாகச் சம்பந்தன் ஐயாவுக்கு எழுதியிருந்தேன். அத்துடன், கடந்த 2020ஆம் ஆண்டு தேர்தலின் போது, சுமந்திரன் வன்னியில் ஏறும் எந்த அரசியல் மேடைக்கும் நான் ஏற மாட்டேன் என தெரிவித்திருந்தேன். அதே போன்று, எந்த அரசியல் மேடையிலும் ஏறவில்லை. அதன் காரணம் என்ன என்றால் சுமந்திரன் பிரச்சாரம் செய்து அதில் ஒரு வாக்கு விழுந்து நான் வெற்றி பெறக் கூடாது என்பதற்காகவேயாகும் என்றார்.

# ‘அஸ்வசும’ நன்மைகளை இழந்தோர் உள்ளனர்

இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை தயாரிப்பதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் விஜித ஹேரத்தின் ஆலோசனைக்கமைய புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்னவினால் பத்து பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை பின்வரும் விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. ‘அஸ்வசும’ நலன்புரித் திட்டத்திற்கு பயனாளிகளைத் தெரிவு செய்யும்போது, உண்மையிலேயே பயனடைய வேண்டிய ஆனால், அந்த வாய்ப்பை இழந்த சமுர்த்திப் பயனாளர்களைக் கண்டறியும் முறைமை ஒன்றை அமைத்தல்.

2. ‘அஸ்வசும’ நலன்புரித் திட்டத்திற்கு பயனாளர்களைத் தெரிவு செய்யும்போது, உண்மையிலேயே பயனடைய வேண்டிய சமுர்த்திப் பயனாளிகளை, ‘அஸ்வசும’ வேலைத்திட்டத்திற்கு உள்வாங்கப்படாமைக்கான காரணங்களை ஆய்வு செய்து அறிக்கையிடுதல்.

3. உண்மையிலேயே ‘அஸ்வசும’ நலன்புரித் திட்டத்தினூடாக பயன்பெற வேண்டிய சமுர்த்தி பயனாளர்களை ‘அஸ்வசும’ வேலைத் திட்டத்தில் உள்வாங்குவதற்கு, தெரிவு செய்யும் நடைமுறையில் உள்ளடக்கப்பட வேண்டிய பரிந்துரைக்கப்பட்ட அளவுகோல்களை அறிக்கையிடல், 2024ஆம் ஆண்டு டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் முறையான விசாரணையை நடத்தி அறிக்கையை வழங்குமாறு புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூகப் பாதுகாப்பு மற்றும் ஊடக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, குழுவிற்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

# “வாக்குகளை வீணடிக்க வேண்டாம்”

எம்.எப்.றிபாஸ்

மக்கள் செல்வாக்கை இழந்து மக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ள நிலையில் இருக்கின்ற கட்சிகளுக்கு வாக்களித்து அவ்வாறான வாக்குகளை வீணடித்து விடாமல் நேர்மையாக அரசியல் செய்து மக்கள் நம்பிக்கையைப் பெற்றவர்களுக்கு தமது வாக்குகளை அளிப்பதற்கு வாக்காளர்கள் முன்வர வேண்டும் என திகாமடுல்ல மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் 7ஆம் இலக்கத்தில் போட்டியிடும் வேட்பாளர் அஸ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

நிந்தவூர் பிரதேசத்தில் வேட்பாளர் அஸ்றப் தாஹிரை ஆதரித்து இடம்பெற்ற பெண்கள் மகாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில் கூறியதாவது,

வெறுமனே பாராளுமன்ற கதிரைகளைச் சூடாக்கி விட்டு, மக்களுக்கு ஆக்கப்பூர்வமான எதையும் செய்யாத கட்சிகளின் வேட்பாளர்களுக்கு வாக்களித்து நமக்கு நாமே சேறு பூசிக் கொள்ளும் நிலையிலிருந்து நாம் விடுபட வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸிற்கான மக்கள் ஆதரவு பெரிதும் அதிகரித்து வருகிறது.

நிந்தவூரில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக நான் போட்டியிடுகின்றேன். இப்பிரதேசத்தில் 23 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் உள்ளன. அக்கட்சியில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் பெறுகின்ற வேட்பாளருக்கு ஒரு உறுப்பினராகத் தெரிவாகின்ற வாய்ப்பு இருக்கின்றது.



அம்பாறை மாவட்டத்தில் இரண்டு ஆசனங்கள் பெறக்கூடிய வாய்ப்பு அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு அதிகரித்துச் செல்கின்ற இச்சந்தர்ப்பத்தில், இப்பிரதேச மக்கள் தங்களது வாக்குகளைச் சிந்தித்து வழங்குவார்களாகவிருந்தால் தமக்கான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்தும் மக்கள் செல்வாக்குடன் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ஆதரவு பெருகி வருகின்ற இந்த நிலையில், நிந்தவூர் பிரதேச மக்களும் இதனோடு இணைந்து நமக்குச் சாத்தியமான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தங்களது வாக்குகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சிறந்த தலைமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ், திறமையான நேர்மையான வேட்பாளர்கள் தேர்தலில் களம் இறக்கப்பட்டிருக்கின்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வெற்றியை உறுதி செய்வதோடு, 7ஆம் இலக்க வேட்பாளரான எனக்கும் மயில் சின்னத்துக்கும் வாக்களித்து நமக்கான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்து கொள்வதற்கு நாம் முயல வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

## பிரதமர் ஹரிணி மன்னாருக்கு விஜயம்



எஸ்.ஆர்.லெம்பேட்

பிரதமர் ஹரிணி அமரசூரிய திங்கட்கிழமை(04) மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது, வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களை ஆதரித்து மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டார்.

இதில், தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் கலந்து கொண்டார்.

பிரதமரின் வருகையினால் மன்னார் நகரப் பகுதியில் பலத்த பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டதோடு, நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற மக்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

## பாண்டிச்சேரி அமைச்சருடன் சுதர்சன் சந்திப்பு



இந்தியாவின் பாண்டிச்சேரி அரச சுற்றுலாத்துறை அமைச்சருக்கும் வடமாகாண சுற்றுலாத்துறை ஒன்றிய தலைவர் சு.சுதர்சன் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு சனிக்கிழமை(2) பாண்டிச்சேரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற சுற்றுலாத்துறை ஒன்றிய தலைவர் நட்பு ரீதியான இச் சந்திப்பினை மேற்கொண்டிருந்தார்.

இச்சந்திப்பின்போது, இலங்கை இந்தியச் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பாகவும் இந்தியச் சுற்றுலாப் பயணிகள் இலங்கையைப் பார்வையிடுவதற்கான சுற்றுலா ஒழுங்குகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதுடன், சுற்றுலா தொடர்பான விளக்கக் கையேடு ஒன்றும் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

## “போராடியே பெற்றோம்; போராடியே பெற வேண்டும்”

செ.திவாகரன்

மலையக மக்களுக்காகக் கடந்த காலங்களிலும் கிடைத்த அனைத்து உரிமைகளையும் போராடியே பெற்றோம், இனியும் புதிய அரசாங்கம் ஊடாக கிடைக்கும் சலுகைகளைப் போராடியே பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம், இதற்கு எந்நேரத்திலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தயாராக உள்ளது என தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அக்கரபத்தனை- டொரிங்டன் பகுதியில் திங்கட்கிழமை (04) நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மலையக மக்களுக்கான உரிமைகளை யாருமே தங்கத் தட்டில் வைத்து வழங்கவில்லை, அனைத்தையுமே போராடிய பெற்றோம். ஆனால், தற்போது புதிய அரசாங்கம் உருவாகியதும், இளைஞர்கள் அவர்களின் பின்னாடி போகின்றனர். உண்மையில் அவர்களுக்கு நாங்கள் பட்ட கஷ்டங்கள் புரியவில்லை. அதேபோல், முன்னைய வரலாறு தெரியாதவர்கள் என்று தான் எனது அனுபவத்தில் கூறுவேன்.

குறிப்பாக அனைவருக்கும் தெரிந்த ஒரு விடயம் தான். புதிய அரசாங்கம் வந்தவுடன் முட்டையின் விலை அதிரடியாகக் குறைக்கப்பட்டது. ஆனால், இன்று முன்பிருந்த விலையோடு அதிகரித்துள்ளது. அத்துடன், நாம் அனைவரும் சோறு மற்றும் ரொட்டி சாப்பிடுவது அதிகம். இன்று பார்த்தால் நாட்டரசியின் விலை எல்லை கடந்து போகின்றது. அதேபோல், ரொட்டிக்குப் பயன்படுத்தும் தேங்காய் ஒன்றின் விலை, 170 ரூபாய் தாண்டியுள்ளது. இன்னும் ஓரிரு நாட்களில் கோதுமை மாவின் விலையை விடத் தேங்காய் ஒன்றின் விலை அதிகரிக்கும் போல் உள்ளது. இதனால் எதிர்காலத்தில் ரொட்டிக்குத் தேங்காய் போடுவது என்பது சந்தேகமாக உள்ளது.

குறிப்பாக புதிய அரசாங்கம் வந்தவுடன் எமது நாட்டில் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கே இவ்வளவு விலை என்றால், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலையானது தானாகவே உயரும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

சாதாரண மக்களுக்கு தற்போதைய எரிபொருள் விலைக் குறைப்பானது போதுமானதாக இல்லை. கடந்த காலங்களில் அரசு மேடைகளில் குறிப்பிட்ட விலையை விட அருகிலும் வராத விலையாகக் காணப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடு தொடர்ந்து நம்மை ஏமாற்றுகிறார்கள் என்பது மேலும் மேலும் தெளிவாகத் தெரிகிறது. இதனால் பொது மக்களிடையே இந்த விடயம் தொடர்பில் அதிக விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எந்த பொருட்களின் விலை குறைக்கப்பட்டாலும், சாதாரண பொதுமக்களையும் பயன் தரும் வகையிலும் சென்றடைய வேண்டும் எனவும் நுவரெலியா மாவட்டத்தில் தமது பிரதிநிதித்துவம் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்றால், மக்களின் வாக்குகள் உறுதுணையாக இருக்க வேண்டும் எனவும் குறித்த மக்கள் சந்திப்பின் போது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல் தெரிவித்துள்ளார்.



# கம்பஹா பிரதேச சபை

## விலைமனுக்கோரள் அறிவித்தல்

**2025 ஆம் ஆண்டிற்கான், இறைச்சி கடை, மீன் கடை, வாரச்சந்தை, பொதுக் கழிவறைகள் மற்றும் பிரதேச சபையின் வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் வெலிவேரிய பொது சந்தைக் கடைகள் மற்றும் கம்பஹா பிரதேச சபை கட்டிடத்திலுள்ள கடைகள் குத்தகைக்கு**

1. கம்பஹா பிரதேச சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள இங்கு குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் 2025.01.01 ஆம் திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரை வியாபார உரிமையை குத்தகைக்கு வழங்குவதற்கும் ஐந்தாவது உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வெலிவேரிய பொதுச் சந்தை கடைகள் 2025.01.01 ஆம் திகதி முதல் 2026.08.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கு ஆறாவது உப அட்டவணையில் உள்ள கடைகள் 2025.01.01 ஆம் திகதி முதல் 2027.02.28 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கு சீல் வைக்கப்பட்ட விலைமனு விண்ணப்பங்கள் 2024.11.26 ஆம் திகதி மு.ப 10.30 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.
2. இதற்காக ஆரவமுள்ள விலைமனு விண்ணப்பதாரிகள் 2024.11.05 ஆம் திகதி முதல் 2024.11.25 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை உள்ள நேரத்தில் குறிப்பிடப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட கட்டணங்கள்இ அதற்கான வரிப்பணம் ஆகியவற்றை பணமாக செலுத்தி எழுத்து மூலமான கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனு விண்ணப்பப்படிவத்தை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக விவரங்களுக்காக 033-2222020 / 0332220221என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அலுவலகத்திற்கு பொறுப்பான அதிகாரியிடம் அறிந்துகொள்ளமுடியும்.
3. விலைமனு விண்ணப்பத்தின் முதல் மற்றும் அதன் நகல் இரண்டையும் இணைத்து 2024.11.26 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு **“பிரதேச சபையின் செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபையின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளை அமுல்படுத்தும் அதிகாரி, கம்பஹா உள்ளூராட்சி சபை, மிரிஸ்வத்தை, முதுன்கொட.”** என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலமாக அனுப்பிவைக்க முடியும் அல்லது கம்பஹா பிரதேச சபையின் பிரதான அலுவலகத்திலுள்ள செயலாளரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட முடியும். விலைமனு விண்ணப்பத்தின் முதல் மற்றும் அதன் நகல் இரண்டையும் இணைத்து கடிதவுரையில் இட்டு கடிதவுரையின் இடது பக்க மேல் குத்தகையின் பெயரை தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். காலம் கடந்து கிடைக்கப்பெறும் விலைமனு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விலைமனு விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் கடைசி நேரம் முடிந்தவுடன் வருகை தந்திருக்கும் விலைமனு விண்ணப்பதாரிகள் / முகவர்கள் முன்னிலையில் கம்பஹா பிரதேச சபை பிரதான மண்டபத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
4. கடந்த வருடங்களில் டெண்டர்கள் தொடர்பாக கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட நபர்களுக்கு அல்லது நடப்பு ஆண்டுக்கான டெண்டர்கள் தொடர்பாக நிலுவை தொகையை செலுத்தாத நபர்களுக்கு டெண்டர்கள் வழங்கப்படாது.
5. பிரதேச சபை கடைகளுக்கான குத்தகையை பெற்றுக்கொள்ளும்போது அதற்கு உரிய மூன்று மாத வாடகைக்கு சமமான தொகையை பாதுகாப்பு வைப்புத் தொகையாக வைப்பு செய்ய வேண்டும்.
6. டெண்டர்கள் பெற்றுக்கொள்ளும் இடத்திற்கான மாதாந்திர மின் கட்டணம் / தண்ணீர் கட்டணங்களை குத்தகைக்காரர்களால் செலுத்தப்பட வேண்டும்.
7. இந்த டெண்டர்களை ஏற்கவோ அல்லது அனைத்து டெண்டர்களை நிராகரிக்கவோ உள்ளூராட்சி மன்றத்தின் டெண்டர் குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

**2022.11.01**
**கம்பஹா பிரதேச சபையில்.**

**எஸ். ஏ.என்.பீ.சுரவீர**
**செயலாளர் மற்றும் கம்பஹா பிரதேச சபை அதிகாரங்கள், செயல்பாடுகள், கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**கம்பஹா பிரதேச சபை.**

### முதல் அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | வெலிவேரிய பொது சந்தையின் பன்றி இறைச்சி கடை WF 03 | 1,000.00 | 5,000.00 | 780,000.00 |
| 2 | வெலிவேரிய பொது சந்தையின் ஆட்டிறைச்சி மற்றும் கோழி இறைச்சி கடை WF 04 | 1,000.00 | 2,500.00 | 330,000.00 |
| 3 | வெலிவேரிய பொது சந்தையின் மீன கடை WF 08 | 1,000.00 | 2,500.00 | 103,200.00 |
| 4 | வெலிவேரிய பொது சந்தையின் மீன கடை WF 09 | 1,000.00 | 2,500.00 | 103,200.00 |
| 5 | வெலிவேரிய பொது சந்தையின் கருவாட்டு கடை | 1,000.00 | 3,000.00 | 60,000.00 |
| 6 | கனேமுல்ல பொதுச் சந்தையில் அமைந்துள்ள கருவாட்டு கடை | 1,000.00 | 2,500.00 | 96,000.00 |

### இரண்டாவது அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | இபுல்கொட வார சந்தையில் உள்ள பொது கழிவறைகள | 1,000.00 | 500.00 | 6,000.00 |
| 2 | கணேமுல்லை பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள பொது கழிவறைகள | 1,000.00 | 1,000.00 | 10,000.00 |

### மூன்றாவது அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | வெலிவேரிய வாராந்த சந்தை (சனிக்கிழமை அன்று) | 1,000.00 | 15,000.00 | 1,000,000.00 |
| 2 | இபுல்கொட வாராந்த சந்தை (வெள்ளிக்கிழமை அன்று) | 1,000.00 | 2,500.00 | 100,000.00 |
| 3 | மகேவிட வாராந்த சந்தை (செய்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை அன்று) | 1,000.00 | 10,000.00 | 1,810,000.00 |

### நான்காவது அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | வெலிவேரிய சந்தைக்கு அருகில் உள்ள பிரதேச சபையின் வாகனங்கள் நிறுத்துமிடம | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |
| 2 | பழைய தபால் நிலையத்திற்கு அருகில் உள்ள பிரதேச சபையின் வாகனங்கள் நிறுத்துமிடம் | 1,000.00 | 3,000.00 | 300,000.00 |

### ஐந்தாவது அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 09 | 1,000.00 | 3,000.00 | 132,000.00 |
| 2 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 15 | 1,000.00 | 3,000.00 | 108,000.00 |
| 3 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 16 | 1,000.00 | 3,000.00 | 108,000.00 |
| 4 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 23 | 1,000.00 | 3,000.00 | 120,000.00 |
| 5 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 24 | 1,000.00 | 3,000.00 | 132,000.00 |
| 6 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 25 | 1,000.00 | 3,000.00 | 132,000.00 |
| 7 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 29 | 1,000.00 | 3,000.00 | 108,000.00 |
| 8 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 30 | 1,000.00 | 3,000.00 | 108,000.00 |
| 9 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 31 | 1,000.00 | 3,000.00 | 108,000.00 |
| 10 | வெலிவேரிய வணிக வளாக கடை இலக்கம் 32 | 1,000.00 | 3,000.00 | 108,000.00 |

### ஐந்தாவது அட்டவணை

| | விபரம் | விலைமனு விண்ணப்படிவ கட்டணம் (ரூ) | மீள் வழங்கப்படும் பிணை வைப்புப் பணம் (ரூ) | குறைந்தபட்ச ஏலத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | கம்பஹா பிரதேச சபை கட்டிடத்திலுள்ள கடை இலக்கம் 30 | 1,000.00 | 3,000.00 | 21,600.00 |

# பேருந்தின் சாரதி மறுத்திருந்தால் விபத்தை தடுத்திருக்கலாம்

ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மாணவர்கள் தொகை கணக்கெடுப்பு ஆய்வுக்காக கல்விப் பயணத்தை மேற்கொண்டிருந்த மாணவர்கள் குழுவொன்று பதுளையில் வாகன விபத்தில் சிக்கிய அவலத்தை நாம் ஏற்கெனவே அறிவோம். இந்தச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து, குன்றின் மீது கவிழ்வதைத் தடுக்க மறு புறம் திரும்பியபோது விபத்து ஏற்பட்டது. பேருந்தின் தரம் மிகவும் மோசமாக இருந்ததை விபத்தின் பின்னர் பிடிக்கப்பட்ட படங்களின் பார்த்தோம். எப்படியிருந்தாலும், விபத்துக்குப் பின்னர் பல்வேறான காரணங்கள் கூறப்பட்டன.

வாகனப் பெருக்கம், வீதிகளை அகலப்படுத்துதல், வாகனத்தை ஓட்டுபவர், கட்டாக்காலிகள் என இந்த நாட்டில் சாலை விபத்துகள் வேகமாக அதிகரித்து வருகின்றன. பதுளை விபத்தில் உயிரிழந்த இரண்டு மாணவிகளின் வயது இருபத்து மூன்று. ஒரு குழந்தையைப் பிறந்தது முதல் பாடசாலைக்கு அனுப்பி, பல்கலைக்கழகம் செல்லும் வரை பெற்றோர்கள் பார்த்துக் கொள்வது இலகுவானது அல்ல.

இப்படி ஒரு பிள்ளை, அதுவும் மிகவும் கஷ்டப்பட்டு வளர்க்கப்பட்ட பெண் பிள்ளை புதைக்கப்படும் போது, அந்த பிள்ளையின், இறந்த உடலுடன் பெற்றோரின் விருப்பமும் அடக்கம் செய்யப்பட்டுவிடுகின்றது என்பது மட்டுமே யதார்த்தமாகும்.

இந்நாட்டில் உள்ள ஒவ்வொரு பாடசாலையிலும் உள்ள பிள்ளைகள், ஒவ்வோர் ஆண்டும் கல்விச் சுற்றுலாச் செல்கின்றனர். அவர்கள் செல்லவேண்டும். நாள் முழுவதும் பாடசாலைகள், வீடு என்று ஒதுங்கிக் கிடக்கும் குழந்தையின் மூளைக்கு இந்தக் கல்வி சுற்றுலாக்கள் நிம்மதியைத் தரும்.

எனவே, கல்விச் சுற்றுலாக்களை நிறுத்த வேண்டும் என்று யாரும் அறிவுறுத்த முடியாது. ஆனால், கல்வி பயணங்களில் இருந்து குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற ஓட்டுநர்களை கட்டாயப்படுத்த இந்த நாட்டின் முழு மக்களுக்கும் உரிமை உள்ளது.

ஜோன் கொத்தலாவல பல்கலைக்கழகத்தின் ஆய்வு சுற்றுலா பேருந்தின் சாரதி அந்த பேருந்தின் 'பிரேக்' வேலை செய்யவில்லை என்பதை அறிந்து பயணத்தை மேற்கொள்ள மறுத்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது. எங்களுக்குத் தெரிந்தவரை, ஒரு பெரிய பள்ளத்தில் விழுவதைத் தடுக்க சாரதி பேருந்தை மறுபுறம் வெட்டினார். அப்போதுதான் விபத்து நடந்துள்ளது.

ஆனால், இந்த பேருந்து பாறையில் விழுந்திருந்தால் மேலும், பல மாணவர்கள் இறந்திருப்பார்கள்.

இந்த நாட்டில் விபத்துகள் நடக்கின்றன. மக்கள் இறக்கின்றனர். இந்த நாட்டில் பல்வேறு குற்றங்கள் இழைக்கப்படுகின்றன. மக்களும் அவர்களால் இறக்கிறார்கள். ஒவ்வொரு முறையும் அவர்களுக்கு எதிராக கட்டுரை எழுதுகிறோம். ஆனால், பத்திரிகை ஆசிரியரின் வார்த்தைகளால் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்பதை நிரூபிக்கும் வகையில் இதுபோன்ற விபத்துகள் அடிக்கடி நடக்கின்றன. இந்த நிலைக்கு வருந்துவதைத் தவிர வேறு வழியில்லை.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.


அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk








## வாழ்வியல் தரிசனம்

பண்டைய காலத்தில் உலக நாடுகளிடையே கொடிய யுத்தங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கும். செழிப்பான நாடுகள், வேண்டுமென்றே சிலநாடுகளுக்கிடையில் யுத்தங்களை உருவாக்கிவிடும். இதனால், நன்கு ஆட்சி செய்த நாடுகள் தோற்பதும் உண்டு. பின்னர் அந்த நாட்டிலுள்ள வளங்கள் சூறையாடப்படும்.

அந்தச் செல்வங்களைத் தனது நாட்டுக்குக் கொண்டு செல்லப்படும். தனது நாட்டில் சிறப்பான ஆட்சியும் கைப்பற்றிய நாட்டில் கொடுங்கோல் ஆட்சியும் நடைபெறும். தோல்வி கண்ட அரசன், பிறநாட்டின் உதவியுடன் மீண்டும் தனது நாட்டைக் கைப்பற்றுவான்.

இதே முறையில்தான் ஒருநாட்டில் புரட்சியை ஏற்படுத்தியவர்கள், அந்த நாட்டை சர்வாதிகார நாடாக மாற்றிவிடுவார்கள். மக்களுக்காக உழைக்கின்றோம் என்பார்கள். ஆனால் மக்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.

இடையில் வாழும் மக்கள் நலிந்து, நசுங்கிப் போய்விடுவார்கள். நீதி, நியாயம், பொய் எல்லாமே மாறி,மாறி வந்துபோகும்.

யுத்தக் கிலி ஒருபோதும் முழுமையாக அகன்றுவிடுவதில்லை. நிம்மதி இல்லாமல் மக்கள் அகதிகளாகச் சிதறி ஓடுவார்கள். நிம்மதியை மனிதன்தான் சிதைக்கிறான். எப்போது முடியும் இந்த நிலை.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முஸ்லிம்களுக்கான அடையாள அரசியலின் கையறுநிலை

மொஹமட் பாதுஷா

ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு, வழக்கமான முஸ்லிம் அரசியலும் அதன் வழிவந்த அரசியல்வாதிகளும் பெரும் சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டுள்ளனர் என்பது பட்டவர்த்தனமானது. அனுரகுமார திசாநாயக்கவை வெற்றி பெறச் செய்வதற்கு மக்கள் எடுத்த முடிவு, முஸ்லிம் அரசியல் பற்றிய பல கேள்விகளை எழுப்பி இருக்கின்றது.

மக்கள் சார்பு அரசியலில் தோல்வியடைந்த முஸ்லிம் அரசியல்வாதிகளின் இந்த கையறுநிலையை இன்னுமொரு தரப்பு வேட்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ள முற்படுகின்றனர். பழையவர்கள் செய்த அரசியல் தவறுகள், மாற்றம் என்ற பெயரில் புதியவர்களுக்கான பிரசாரங்களை இலகுபடுத்திக் கொடுத்துள்ளது என்பதையும் மறுக்கவியலாது.

முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ அடையாள அரசியல் கிழக்கு மாகாணத்தையும் வட மாகாணத்தையும் பெரிதும் சார்ந்திருக்கின்றது. ஏனைய மாவட்டங்களில் அதன் தாக்கம் இருந்தாலும் கூட அங்குள்ள முஸ்லிம் மக்கள் பெரும்பாலும் தனித்துவ முஸ்லிம் கட்சிகளின் அரசியலை விட பெரும்பான்மைக் கட்சிகளில் உள்ள முஸ்லிம், சிங்கள அரசியல் பிரதிநிதிகளையே நம்பியிருக்கின்றனர் எனலாம்.

முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியல் கிழக்கு மாகாணத்திலேயே தோற்றம் பெற்றது. எம்.ஏ.எம்.மொஹிதீன் போன்றோரின் சிந்தனையை அரசியலுக்குள் கொண்டு சென்றவர் முன்னாள் அமைச்சர் எம்.எச்.சேகு இஸ்ஸதீன் என்றால், அதனை வெற்றிகரமாக மக்கள் மயப்படுத்தி, அரசியல் வெற்றி பெற்றவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் ஆவார்.

அவர் இறக்கும்போது, முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியலும் அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் உச்சத்தில் இருந்தன. அதன்பிறகு றவூப் ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் வீழ்ச்சிப் பாதையில்பட்டவர்த்தனமான விடயமாகும்.

முஸ்லிம் காங்கிரஸ் உடைந்து, புதிய காங்கிரஸ்கள் உருவாகின. இதனால் மு.காவின் ஊடாக பெறப்பட்ட எம்.பிகளின் எண்ணிக்கை குறைவடைந்தது மட்டுமன்றி, எல்லா முஸ்லிம் கட்சிகளும் இணைந்து கூட 'அஷ்ரப் காலத்து மு.காவின்' இடத்தை நிரப்ப முடியாது போனது என்பதே உண்மையாகும்.

பேரம் பேசும் அரசியல் ஒரு கட்டத்தில் இணக்க அரசியலாக மாறியது. அதாவது தனித்துவ அடையாள அரசியலோடு உருவான மு.கா. அதே சித்தாந்தத்தில் உருவாக்கப்பட்ட மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் கட்சிகள் பெருந்தேசியக் கட்சிகளோடு இரண்டறக் கலந்தன. இதனால் தனித்துவ அரசியல் பலம் மழுங்கிப் போகத் தொடங்கியது.

அதேநேரம், முஸ்லிம் கட்சிகளும், அடையாள அரசியல் கோட்பாட்டில் வந்த எம்.பிக்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் முஸ்லிம்களுக்கான தனித்துவ அரசியலைச் சரிவரவில்லை. இன்று வரை இந்த நிலைமைதான் நீடிக்கின்றது.

இதனால் குறிப்பாக வடக்கு, கிழக்கு முஸ்லிம்களுக்கு பெரும் வெறுப்பு ஏற்பட்டது. மலைநாட்டு-கொழும்பு அல்லது தென்னிலங்கை-முஸ்லிம்கள் ஆரம்பத்தில் இருந்தே இந்த தனித்துவ அடையாள அரசியலையும் முஸ்லிம் கட்சிகளையும் பெரிதாக அங்கீகரிக்கவில்லை என்பது இவ்விடத்தில் நினைவுகொள்ளத்தக்கது.

இன்று, முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ் மற்றும் இதர முஸ்லிம் அணிகள் முஸ்லிம் சமூகத்திற்கான பிரத்தியேக அரசியல், தனித்துவ அடையாள அரசியல் என்ற பெயர்ப் பலகையை மாட்டிக் கொண்டாலும், நிஜத்தில் அந்த அரசியலை அவர்கள் செய்வதில்லை என்பது கண்கூடு.

இணக்க அரசியல் என்ற பெயரில் அரசாங்கங்களின் முஸ்லிம் விரோத நடவடிக்கைகளுக்கும் முட்டுக் கொடுத்தமை தொடக்கம் வியூகம் என்ற பெயரில் தேர்தல் கூட்டணிகளில் இணைந்து போட்டியிட்டதன் ஊடாக தனித்துவ அடையாளத்தை இழந்தமை வரை பல பின்னடைவுகளை முஸ்லிம் அரசியல் சந்தித்திருக்கின்றது.

முஸ்லிம் கட்சிகள் ஊடாக நேரடியாகத் தெரிவு செய்யப்படும் எம்.பிக்கள் குறைந்தமையை இதன் வெளிப்படையான விளைவாக, குறிப்பிடலாம். உதாரணமாகக் கலைக்கப்பட்ட கடந்த பாராளுமன்றத்தில் 15இற்கு மேற்பட்ட முஸ்லிம் எம்.பிக்கள் இருந்த போதும், முஸ்லிம் கட்சிகள் ஊடாக போட்டியிட்டு வெற்றிபெற்ற மூன்று எம்.பிக்களே பதவி வகித்தனர்.

முஸ்லிம் கட்சித் தலைவர்கள் இருவர் உட்பட மற்றெல்லாரும் ஐ.ம.ச. எம்.பிக்களே. முஸ்லிம் தலைவர்களுள் தேசிய காங்கிரஸ் தலைவர் மட்டுமே கடந்த முறை தனது கட்சி ஊடாக எம்.பியாக தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்த முறை தேர்தலில் இந்நிலைமை இன்னும் மோசமாகியுள்ளது.

மூன்று முஸ்லிம் தலைவர்களும் இத் தேர்தலில் தங்களது சொந்தக் கட்சியின் சின்னத்தில் போட்டியிடவில்லை.

குறிப்பாக இரு பிரதான முஸ்லிம் கட்சிகளும் வியூகம் என்ற பெயரில் பல இடங்களில் ஐ.ம.சக்தியுடன் இணைந்தும் ஓரிரு மாவட்டங்களில் மட்டும் தனித் தனியாகவும் போட்டியிடுகின்றன.

வழக்கமான முஸ்லிம் அரசியலால் முஸ்லிம் சமூகம் மனம் வெறுத்துப் போயுள்ள ஒரு காலகட்டத்தில், முஸ்லிம் கட்சிகளுக்கான வாக்கு வங்கிகளில் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பெரும்பான்மைக் கட்சிகளுக்கு வாக்குச் சேகரித்துக் கொடுக்கின்ற வேலையைச் செய்து, அதனூடாக ஓரிரு முஸ்லிம் எம்.பிக்களை பெறுவதால் நமது தனித்துவம் பாதுகாக்கப்படுவது சாத்தியமே இல்லை.

முஸ்லிம் கட்சிகளின் சார்பாக வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருக்கின்ற எல்லோரும் பிரதிநிதித்துவ அரசியலுக்குப் பொருத்தமானவர்கள் என்று சொல்ல முடியாது. இதனால் எம்.பிக்கள் குறையலாம். என்.பி.பி. அலையும் இதில் செல்வாக்குச் செலுத்தலாம்.

முஸ்லிம் கட்சிகளில் இதுவரை காலம் எம்.பியாக இருந்தவர்கள் சமூகத்திற்கான அரசியலைச் செய்யவில்லை என்பது உண்மைதான். அவர்களுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்பதை நாமே இந்தப் பக்கத்தில் வெளியான பத்தியில் பல தடவை குறிப்பிட்டுள்ளோம். அது வேறு விடயம்.

ஆனால், முஸ்லிம் தனித்துவ அடையாள சிந்தனை தூர்ந்து போவதும், முஸ்லிம் கட்சிகள் ஊடான எம்.பிக்கள் குறைந்து போவதும் நீண்டகால அடிப்படையில் முஸ்லிம் சமூகத்திற்கு சாதகமானதா எனச் சிந்திக்க வேண்டியுள்ளது.

முஸ்லிம்கள் செறிவாக வாழும் பகுதிகளில் முஸ்லிம் கட்சிகள் ஊடாகவோ எதிர்க் கட்சிகள் ஊடாகவோ போடப்பட்டுள்ள வேட்பாளர்கள் எல்லோருமே பிரதிநிதித்துவ அரசியலுக்கு சிறப்பாகப் பொருந்துவார்கள் எனச் சொல்ல முடியாது.

முஸ்லிம் அணிகளால் களமிறக்கப்பட்டுள்ள சிலர் நீண்டகாலம் சமூகத்திற்கு ஒன்றுமே செய்யாத பழைய எம்.பிக்கள், சிலர் சமூக அரசியலுக்குப் பொருத்தமற்ற புதுமுகங்கள். மறுபுறத்தில் பெரும்பான்மைக் கட்சிகளால் களமிறக்கப்பட்டுள்ள கணிசமானோர் இதுவரை தம்முடைய மக்கள் செல்வாக்கை நிரூபிக்காதவர்கள்.

அந்தக் கட்சிகளுக்கு சீனியர் என்றாலும், முஸ்லிம் அரசியலுக்குள் அவர்கள் புதுவரவுகள் என்றே கூறலாம்.

இந்தப் பின்னணியில், முஸ்லிம் தனித்துவ அடையாள அரசியல் சிதைந்து போனதற்கு முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள், முன்னாள் எம்.பிக்களே காரணமென்பதைக் கொஞ்சம் கூட மறுக்க முடியாது.

ஆனால், அதன் எதிரொலியாக, இனிவரும் காலங்களில் பொதுவில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறைவதும், நேரடியாக முஸ்லிம் கட்சிகளின் ஊடாக அன்றி, பெரும்பான்மைக் கட்சிகள் ஊடாகவே கணிசமானோர் எம்.பியாவதும் நல்ல சகுனங்களாகத் தெரியவில்லை.

அனுரகுமார திசாயநாயக்கவின் வெற்றி ஒரு தெளிவான மாற்றத்தை இலங்கைச் சமூகங்களிடையே ஏற்படுத்தியிருக்கின்றது.

எனவே இன, மத அடிப்படையிலோ சிங்கள அல்லது தமிழ் இனவாதம் என்று சொல்லியோ முஸ்லிம் கட்சிகள் இனியும் அரசியல் செய்யக்கூடாது.

பல்லின நாடொன்றுக்குப் பொருத்தமான பொது அரசியல் போக்கைக் கடைப்பிடிக்கவேண்டும். மக்களை உணர்ச்சியூட்டும் இன ஐக்கியத்திற்கு எதிரான அரசியலை முன்னெடுக்க வேண்டும். கண்டியில் ஒரு கதையும் கல்முனையில் இன்னொரு கதையும் பேசக் கூடாது

ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் ஆட்சி சிறப்பாக அமையுமிடத்து இனம் சார்ந்த, பிரத்தியேக அரசியலின் தேவைப்பாடு குறைய வாய்ப்புள்ளது. அந்த நம்பிக்கையும் உள்ளது.

இருப்பினும், ஒரு தனித்துவமான, தனிப் பண்புகளைக் கொண்ட இனக் குழுமம் என்ற வகையில் முஸ்லிம்களுக்குத் தனித்துவமான அரசியலின் தேவை இப்போது, இந்த நிமிடம் வரை இருக்கின்றது.

முஸ்லிம் கட்சிகளில் ஒன்று அல்லது இரண்டு எம்.பிக்கள் மட்டுமே நேரடியாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகும் சாத்தியமுள்ள சூழலில், பெரும்பான்மைக் கட்சிகளில் போட்டியிட்டுத் தெரிவு செய்யப்படும் சில முஸ்லிம் எம்.பிக்களால் முஸ்லிம் சமூகத்திற்கான பிரத்தியேக அரசியலை மக்கள் எதிர்பார்க்கும் அளவுக்குச் செய்ய முடியுமா? என்பதை முஸ்லிம் சமூகம் சிந்திக்க வேண்டியுள்ளது.

## கடிதங்கள்

### காடுகளினால் சூழப்பட்ட பாடசாலை



முல்லைத்தீவு-தேவிபுரம் பாடசாலையின் சூழலில் உள்ள காடுகளைத் துப்புரவு செய்வதற்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாடசாலை சூழலின் காணப்படும் காடுகள் துப்புரவு செய்யப்படாததன் காரணமாக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகவே காணப்படுகின்றது.

பாடசாலை அரச காணியின் சுமார் 20 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் அதிக மரஞ்செடி, கொடிகள் வளர்ந்திருப்பதன் காரணமாக பாடசாலைக்கு பாம்புகள் வருவதாகவும் பன்றிகளின் நடமாட்டம் அதிகரித்து காணப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இக்காடுகளில் சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெறுவதால் பாடசாலைக்கு அருகில் மதுப் போத்தல்கள், நிறைந்து காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், காணியற்ற குடும்பங்களுக்குக் குறித்த காணியினை பிரித்து வழங்குங்கள், அல்லது பிரதேச செயலகத்தின் பொறுப்பில் அந்தக் காணிகளைத் துப்புரவு செய்து மாணவர்கள், ஆசிரியர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யுங்கள் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரிடம் தேவிபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்

# திருமலை நவத்தின் ‘தேசாந்தரம்’ குறுநாவல்


சயனிகா ஸ்ரீ,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

திருமலையின் மூத்த ஊடகவியலாளர், எழுத்தாளர், இலக்கியவாதி, வரலாற்று ஆய்வாளர், அரசியல் ஆய்வாளர் திருமலை நவத்தின் (சிதம்பரப்பிள்ளை நவரத்தினம்) ‘தேசாந்தரம்’ குறுநாவல் என் கையில் வாசிக்கக் கிடைத்தது. குறுநாவல் என்பதனால் மட்டுமல்ல, ஒரு படைப்பு யதார்த்தமானதாகவும் உணர்வுகளையும் கண்முன்னே கொண்டு வருவதன் அற்புதத் தன்மையினால் ஓரிரு தினங்களிலேயே நாவலை வாசித்து முடித்து விட்டேன்.

இலங்கை தமிழர்களின் வாழ்வியலை வரலாற்று ஆவணமாக இந்நாவல் பிரசவித்து இருக்கின்றது. நடந்து முடிந்த வரலாற்று நிகழ்வுகள் இரண்டு பதிவிடப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களது பெரும் பலவீனமாகக் கருதப்படுவது ஆவணப்படுத்தலின்மை ஆகும். அந்த வகையில், ‘தேசாந்தரம்’, வரலாற்று நிகழ்வுகளை அனைவர் மனதிலும் ஆழமாக பதியும் வகையில் மிகவும் விறுவிறுப்பாக எழுதப்பட்டுள்ளது.

தேசாந்தரத்தின் கரு - யுத்தத்தின் போது, நடந்த ஆட்கடத்தல்கள், படுகொலைகள், காணாமல் ஆக்கப்பட்டமை, இன அழிப்புக்கள், அகதி வாழ்க்கை, புலம்பெயர்வுகள், வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தமை, சிறை வாழ்க்கை பற்றிய பல உண்மைகள் வெளிக்கொணரப்படாதிருக்கும் நிலையில் தமது வாழ்விடத்திற்கு அருகிலும், மூதூரிலும் நடந்த இரு துன்பியல் சம்பவங்களை தொகுத்து காத்திரமான முறையில் தேசாந்தரம் குறுநாவலாக வெளியாகியது வியப்புக்குரிய விடயமாகும்.

பெரும்பாலான படைப்புக்கள் கதை வடிவில் வர்ணனை கதைக்களம், வர்ணனை பாத்திரமுனைப்பு, வர்ணனையுடனான வாழ்க்கை, வழக்கமான நிகழ்ச்சிகள், பாத்திரங்கள், உரையாடல்கள் என வர்ணனைப் போக்கில் கற்பனை உலகுக்கு அழைத்துச் செல்லும் வகையில் இருக்கும்.

‘தேசாந்தரம்’ கதை நடைபெறும் களமான திருகோணமலையின் இயற்கை அழகும், அதனை எழுத்தாளர் வெளிப்படுத்தும் விதமும், திருகோணமலைக்கு முன் பின் வந்திறாத வாசகனை கூட அந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லும்.

‘தேசாந்தரம்’ நாவல் ஆசிரியர், தனது வாழ்விலும் சமுதாயத்திலும் நன்கு கண்டு, கேட்டு அறிந்தவற்றை கதையாக வடிவமைத்துள்ளார். அதுவே இந்த நாவலுக்கு சிறப்பினை பெற்று தந்திருக்கின்றது. மேலும், நாவலில் இடம்பெற்ற கதாபாத்திரங்களும் நாம் வாழும் சமூகத்தில் தினமும் நடமாடிக் கொண்டிருக்கும் உண்மையான மனிதர்களாக யதார்த்தத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது. நம் உணர்வுகளையும் நினைவுகளையும் உள்ளத்து உணர்ச்சிகளையும் பிரதிபளிக்கின்றது. அத்தோடு, பாத்திரச் சேர்க்கைகள் அளவோடும் தேவை கருதியும் அளவாக இடம்பெற்று இருக்கின்றது.

குறுநாவலில் நீலா, வித்தியா, மனோ, பவளம், நயந்தன், சின்னையா மாஸ்டர் ஆகியோர் பிரதான பாத்திரங்களாகவும் ஏனையோரைத் துணைப் பாத்திரங்களாகவும் கொண்டு கதையை உயிரோட்டமாகவும் யதார்த்தமாகவும் எடுத்துச் சென்று இருக்கின்றார் ஆசிரியர். நாவலில் கதாபாத்திரங்களுக்கிடையிலான உரையாடல்களும் யதார்த்தமாகவும் இயல்பாகவும் இருக்கின்றது.


ஏக்கம், தவிப்பு, எதிர்பார்ப்பு, விரக்தி, வலிகள், வேதனைகள் அனைத்தையும் கதை முழுவதிலும் அள்ளித் தெளித்து இருக்கின்றார். நாவலாசிரியர் இவை அனைத்தின் மூலமும் கதாபாத்திரங்களுக்கு உயிர் கொடுத்து இயல்பான கதையோட்டத்துடன் உரையாடல் பாணியில் உயிரோட்டமாக நகர்த்தி இருக்கின்றார். இதுவே இதன் சிறப்பம்சம் ஆகும்.

உளவியல் தெறிப்புக்கள் நாவலில் அதிகம் எடுத்துக் காட்டப்படுகின்றன. நாவலின் பின்னணி வர்ணனைகளும் உரையாடல்களும் வாசகர்களை கதையோட்டத்துடன் ஒன்றிக்க வைத்து இதற்கு அடுத்து என்ன நடக்கப் போகிறது? என்ற ஆர்வத்தை தூண்டி விடுவதாக அமைகின்றது. கதையின் ஆரம்பம் முதல் முடிவு வரை சிறப்பாகக் கட்டமைக்கப்பட்டிருக்கின்றது.

கால வெள்ளமென்பது நதியைப் போல நீளமாகவோ, ஆழியைப் போலஆழமாகவோ இருப்பதில்லை. அது கண்ணுக்குப் புலப்படாத பஞ்ச பூ தங்களின் நகர்வு என்பதை நீலா இந்த ஒரு மாத காலத்துக்குள்ளேயே புரிந்து கொண்டாள் என்ற சிந்தனை மூலம் ஆழமாக முன்வைத்திருக்கின்றார். இது போன்றே அனைத்து சந்தர்ப்பத்திலும் நினைவோட்ட உக்தியுடன் வெளிப்படுத்தி இருப்பது கதை சொல்லும் பாங்கை வெளிப்படுத்தி இருக்கின்றது.

நாவலின் நாயகியான நீலாவை ஆரம்பத்தில் சாதாரண கதாபாத்திரமாக சித்திரித்து பிறகு ஏக்கம், தவிப்பு, கவலை கொண்டவளாக காட்டி இறுதியில் நயந்தனின் தொலைபேசி உரையாடலை தொடர்ந்து எத்தனை பிரச்சினைகள், சவால்களையும் எதிர்கொள்ளக்கூடிய பக்குவப்பட்ட பெண்ணாக வெளிப்படுத்தி இருப்பது நாவல் ஆசிரியரின் சிறப்பை வெளிப்படுத்தி இருக்கின்றது. நீலாவுக்கும் வித்யாவிற்கும் இடையிலான நட்பு ஆழமாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. தனது உயிருக்குயிரான நண்பி வித்தியா படுகொலை செய்யப்பட்டதும் நீலாபடும் வேதனையை ஆசிரியர் மிக ஆழமாக சித்தரித்து இருக்கின்றார்.

வடக்கிலும் கிழக்கிலும் 1983ஆம் ஆண்டிலிருந்து 26 வருடகால உள்நாட்டு யுத்தத்தில் தமிழ் மக்கள் அனுபவித்த வேதனைகள், இழப்புக்கள், அவலங்கள், உறவுகளை இழந்த வேதனைகள், தமிழரின் பூர்வீக நிலங்கள் அரச படைகளால் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்டமை, அரச மரங்கள் பிரதான இடங்களில் திடீர் திடீரென முளைத்த புத்தர் சிலைகள், அரசு பயங்கரவாதம் திட்டமிட்டு தமிழ் இளைஞர்களின் உரிமைகளை காவு கொண்டமை, சுற்றுவழிப்புகள், சித்திரவதைகள் ஆட்கடத்தல்கள், காணாமல் ஆக்கப்பட்டமை, உயிருக்கும் வாழ்வுக்கும் உத்தரவாதம் இல்லாத நாட்டு சூழல் என்பவற்றை கால சூழல் உணர்ந்து நூலாசிரியர் ஆணித்தரமாக பதிவிட்டு இருக்கின்றார். அந்த வகையில் தேசாந்தரம் குறுநாவல் வரலாற்றில் பதிவிடப்பட்டு முழுமை பெற்றிருக்கிறது என்பது நிதர்சனமாகும்.






> ‘தேசாந்தரம்’ நாவல் ஆசிரியர், தனது வாழ்விலும் சமுதாயத்திலும் நன்கு கண்டு, கேட்டு அறிந்தவற்றை கதையாக வடிவமைத்துள்ளார். அதுவே இந்த நாவலுக்கு சிறப்பினை பெற்று தந்திருக்கின்றது. மேலும், நாவலில் இடம்பெற்ற கதாபாத்திரங்களும் யதார்த்தத்தை வெளிப்படுத்துகின்றது

> உயிருக்கும் வாழ்வுக்கும் உத்தரவாதம் இல்லாத நாட்டுச் சூழல் என்பவற்றைக் கால சூழல் உணர்ந்து நூலாசிரியர் ஆணித்தரமாகப் பதிவிட்டு இருக்கின்றார். அந்த வகையில், தேசாந்தரம் குறுநாவல் வரலாற்றில் பதிவிடப்பட்டு முழுமை பெற்றிருக்கிறது என்பது நிதர்சனமாகும்



## தமிழ் ரீமேக்கில் ஸ்ரீதேவி மகள்

தமிழில் வெற்றிப்பெற்ற ‘ஈரம்’ திரைப்படத்தை இந்தியில் ரீமேக் செய்ய ஏற்பாடுகள் நடக்கும் நிலையில், மனோஜ் பரமஹம்சா இயக்க இருப்பதாக கூறப்படுகிறது.

தமிழில் ஆதி, நந்தா, சிந்து மேனன் ஆகியோர் நடித்து 2009ஆம் ஆண்டு திரைக்கு வந்த ‘ஈரம்’ படம் நல்ல வசூலை குவித்தது.

இந்த படத்தை அறிவழகன் இயக்கி இருந்தார். ‘ஈரம்’ படம் வெளியாகி 15 வருடங்கள் ஆகியுள்ள நிலையில், இந்த படத்தை இந்தியில் ரீமேக் செய்ய ஏற்பாடுகள் நடக்கின்றன.

இதில் முதன்மை கதாபாத்திரத்தில் நடிக்க மறைந்த நடிகை ஸ்ரீதேவியின் மகளும் ஹிந்தி நடிகையுமான ஜான்வி கபூரிடம் பேசி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த படத்தில் நாயகனாக நடிப்பது யார் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஜான்வி கபூர் தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆருடன் நடித்த ‘தேவரா’ படம் கடந்த மாதம் வெளியாகி நல்ல வசூல் பார்த்தது குறிப்பிடத்தக்கது.

## இன்ப அதிர்ச்சி



இந்தி சினிமாவில் ‘கிங் கான்’ என அழைக்கப்படும் நடிகர் ஷாருக்கான், அட்லீ இயக்கத்தில் நடித்து கடந்த ஆண்டு வெளியான ஜவான் திரைப்படம் மாபெரும் வெற்றியைப் பெற்றது.

இந்த நிலையில், சனிக்கிழமை (03) ஷாருக்கான் அவரது 59ஆவது பிறந்தநாளை தனது ரசிகர்களுடன் கொண்டாடினார். அப்பொழுது நடைப்பெற்ற பிறந்தநாள் விழாவில் ஷாருக்கான், “நான் இப்பொழுது புகைப்பிடிப்பதை நிறுத்திவிட்டேன். புகைப்பிடிப்பதை நிறுத்திய பின் சுவாசம் சீராக இருப்பதை உணரமுடிகிறது” என கூறியுள்ளார்.

2011இல் நடந்த ஒரு நேர்காணலில் ஷாருக்கான் தான் ஒரு நாளைக்கு 100 சிகரெட் பிடிப்பேன். உணவு, தண்ணீர் என எதுவும் உட்கொள்ளாமல், 30 கப் காபி மட்டும் குடித்துக்கொண்ட காலமும் இருந்தது என கூறியது குறிப்பிடத்தக்கது.



## ரெஜினா கண்ட வசீகரம்

நடிகர் அஜித் குமார் – இயக்குநர் மகிழ் திருமேனி கூட்டணியில் உருவாகி இருக்கும் படம் விடாமுயற்சி. சில மாதங்களுக்கு படத்தின் போஸ்டர்களும் மற்றும் படப்பிடிப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களை வெளியிட்டனர்.

அந்தவகையில், விடாமுயற்சி படத்தின் டப்பிங் பணிகள் பூஜையுடன் தொடங்கியதாக படக்குழு சில நாட்களுக்கு முன் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது.

இந்த நிலையில், அண்மையில் நடந்த ஒரு நேர்காணலில் ரெஜினா கசான்ட்ரா விடாமுயற்சி படத்தின் சில அப்டேட்களை கூறினார்.

அதில், “ திரைப்படம் மிகவும் அழகாகவும் பிரம்மாண்டமாக உருவாகியுள்ளது. இப்படத்திற்கு முன் நான் அஜித் சாரை சந்தித்ததில்லை. எல்லோரும் அவரை பார்க்க வேண்டும். அவரைப் போல் வசீகரமான நபரை என் வாழ்வில் பார்த்ததில்லை.

திரைப்படம் மிகச் சரியான நேரத்தில் வெளிவரும். இயக்குநர் மகிழ்திருமேனி சிறப்பாக இயக்கியுள்ளார். 90 சதவீத திரைப்படம் அஜர்பைஜானில் படமாக்கப்பட்டுள்ளது. என்னுடைய கதாப்பாத்திரத்தை திரைப்படத்தில் ஆர்வமாக உள்ளேன்” என கூறியுள்ளார்.



# உலக சுனாமி விழிப்புணர்வு தினம்



ஜப்பானில் ஏற்பட்ட சுனாமிக்குப் பிறகு பொதுமக்களிடம் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உலக அளவில் ஒத்துழைப்பு அவசியம் என ஐ.நா. சபை வலியுறுத்தியது. இதற்காக அனைத்து உலக நாடுகளையும் ஒருங்கிணைத்து ஐ.நா. சபை கடந்த 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒரு மாநாடு நடத்தியது.

அதில், பேசியவர்கள் இயற்கைப் பேரிடர்கள் குறித்த விழிப்புணர்வு, கல்வியறிவு மக்களுக்கு அளிக்க வேண்டும். இயற்கைப் பேரிடர்களில் இருந்து மக்களைக் காப்பாற்ற விழிப்புணர்வு ஏற்படுத்துவது மிகவும் அவசியம் என்று வலியுறுத்தினர்.

மேலும், சுனாமியில் இருந்து உயிர் பிழைத்த செக் குடியரசின் பிரதிநிதி உட்பட சிலர் பேசும்போது சுனாமி தொடர்பான தங்கள் எண்ணங்களைக் கூட்டத்தில் பகிர்ந்து கொண்டனர்.

இதேபோல் 2004ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சுனாமியில் தாய்லாந்து கடற்கரையில் இருந்து தப்பித்த செக் குடியரசைச் சேர்ந்த பெட்ராநெம்கோவா என்பவர் பேசும்போது, "தண்ணீர் அல்ல ஒரு பெரிய கான்கிரீட் கட்டிடம் தன் மீது விழுந்ததைப் போன்று உணர்ந்தேன். நான் தங்கியிருந்த பயணியர் விடுதி சில வினாடிகளில் முழுவதும் இடிந்து தரைமட்டமானது. எல்லா இடங்களிலும் இடிபாடுகளே காணப்பட்டன. எனவே, இயற்கைப் பேரிடர் குறித்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை நாடுகள் கையாள்வது அவசியம்" என்றார்.

முடிவில், ஆண்டுதோறும் நவம்பர் 5ஆம் திகதி உலக சுனாமி விழிப்புணர்வு தினமாகக் கடைப்பிடிக்க ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி சுனாமி விழிப்புணர்வு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

சுனாமி பாதிப்புகள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் அது குறித்த பாதிப்பைப் பெருமளவில் குறைக்க முடியும் என்பதே இதன் நோக்கம் இதனால் உலக சுனாமி விழிப்புணர்வு தினத்தில் மக்களிடம் சுனாமி பாதிப்புகள், அதுபோன்ற அவசர காலங்களில் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பல்வேறு நிகழ்ச்சிகள் உலகம் முழுவதும் நடத்தப்படுகின்றன.

கடலில் நிலத்தட்டுகள் மோதுவதால் கொந்தளிப்பு கடலில் உள்ள தரைப்பகுதிக்கு அடியில் நிலத்தட்டுகள் நகரும்போது அல்லது ஒன்றுடன் ஒன்று மோதும்போது, அங்கு திடீர் மாற்றம் ஏற்படும். அப்போது கடல் கொந்தளித்து இராட்சத அலைகள் உருவாகி அருகில் உள்ள அனைத்து கடலோரப் பகுதிகளில் புகுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தும். இதைச் சுனாமி என்று அழைக்கிறார்கள்.

கடல் அடியில் பூகம்பம் மட்டுமல்லாமல், மண்சரிவு, எரிமலை வெடிப்பு மற்றும் விண்வெளியில் இருந்து விண் கல் விழுதல் ஆகியனவற்றின் காரணமாகவும் 'சுனாமி' ஏற்படுகிறது.

சுனாமி அபூர்வமாக நிகழக் கூடியதுதான். எனினும், இயற்கைப் பேரிடர்களில் அதிகபட்ச உயிரிழப்பையும், பலத்த பொருட்சேதத்தையும் ஏற்படுத்துகிறது. சுனாமிக்கு எல்லையே கிடையாது.

கடந்த 100 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள 58 சுனாமிகளால் இதுவரை பல இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். இது ஒவ்வொரு முறை ஏற்பட்ட சுனாமியின்போது சராசரியாக 4,600 பேர் உயிரிழந்துள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

ஜப்பானில் கடந்த 2011ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின்போது இடிபாடுகளில் சிக்கி 18,000 பேர் உயிரிழந்தனர்.

ஜப்பானில் சுனாமி, தமிழில் ஆழிப்பேரலை சுனாமி என்பது ஜப்பான் சொல். சு (tsu) என்றால் துறைமுகம். நாமி (nami) என்றால் அலை. எனவே, சுனாமி என்றால் 'துறைமுக அலை' என்று பொருள். சுனாமிக்கு வேறு சில மொழிகளில் வேறு வார்த்தைகள் உள்ளன. தமிழில் 'ஆழிப்பேரலை' என்று அழைக்கப்படுகிறது.

ஆக்கினஸ் மொழியில் சுனாமியை 'பியுனா' அல்லது 'அலோன் புலூக்' என்று அழைப்பர். 'அலோன்' என்ற வார்த்தைக்குப் பிலிப்பைன்ஸ் மக்களின் மொழியில் 'அலை' என்று பெயர். இந்தோனேசியாவின் மேற்கு சுமத்திரா கடற்கரையில் உள்ள சிமிலி தீவில் 'சுமாங்' என்றும் சிகுலி மொழியில் 'எமாங்' என்றும் அழைக்கப்படுகிறது.

சுனாமி என்பது அடுக்கடுக்கான பல அலைகளால் உருவாகும். இந்த அலைகள், கடற்பரப்பு முழுவதும் பரவி, கரையை நோக்கி, மணிக்கு 1,000 கி.மீ. வேகத்தில் சீறிப் பாய்ந்து செல்லும். இந்த அலைகளின் வேகம், ஜெட் விமானத்தின் வேகத்துக்குச் சமமானதாக, சில சமயத்தில் கூடுதலாக இருக்கும் என்று கூறப்படுகிறது. சுனாமியின் வேகம் ஒவ்வொரு முறையும் வேறுபடுகிறது.

ஆபத்தை உணர்ந்து பலரை காப்பாற்றிய மாணவி

இங்கிலாந்தைச் சேர்ந்த பள்ளி மாணவி டில்லி ஸ்மித் தனது பெற்றோர் மற்றும் ஏழு வயது சகோதரியுடன் கிறிஸ்துமஸ் விடுமுறையைக் கழிக்கத் தாய்லாந்து நாட்டில் உள்ள மைக்காவோ கடற்கரைக்கு வந்திருந்தார்.

டிசம்பர் 26, 2004ஆம் ஆண்டு மைக்காவா கடற்கரையில் இருந்த சுற்றுலாப் பயணிகள் கடல் உள்வாங்குவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

கடற்கரையில் தனது சகோதரியுடன் விளையாடிக் கொண்டிருந்த டில்லி ஸ்மித், தனது பெற்றோரிடம், "நாம் தற்போது ஆபத்தில் இருக்கிறோம். சுனாமி அலை கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. கடற்கரையை விட்டு நாம் தூரத்தில் சென்று விடவேண்டும். சுனாமிகுறித்து எனது பள்ளியில் புவியியலாசிரியர் பாடம் எடுத்தார். சுனாமி வந்தால் எப்படி முன்னெச் சரிக்கையாக செயல்பட வேண்டும் என்று கற்றுக் கொடுத்தார்" என்றார்.

உடனே டில்லி ஸ்மித்தின் பெற்றோர் கடற்கரையில் நின்று கொண்டிருந்த சுற்றுலாப் பயணிகளை எச்சரித்தனர். இதனால் கடற்கரையில் நின்று கொண்டிருந்த நூற்றுக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பான இடத்துக்கு வெளியேறினர்.


சுனாமியிலிருந்து நூறுக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகளைக் காப்பாற்றியதற்காக பிரான்ஸின் குழந்தைகள் பத்திரிகையான மோன் கோடிடியன் 2004ஆம் ஆண்டின் மிகச் சிறந்த குழந்தை விருதை வழங்கியது. மேலும் அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளிண்டனிடம் பாராட்டு பெற்றார்.

## நூல் வெளியீடு

கவிஞர் புத்தளம் மரிக்கார் எழுதியுள்ள 'ரகசியங்கள்', 'மைத்துளிகள் மரணிப்பதில்லை' நூல் வெளியீட்டு விழா புத்தளம் நகரில் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை மிக விமரிசையாக இடம்பெற்றது.

விசேட அதிதிகளாக வலம்புரி கவிதா வட்டம் தலைவர் கவிமணி என்.நஜ்முல் ஹுசைன், புத்தளம் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், வரலாற்று ஆய்வாளர் இஸட்.ஏ.சன்ஹீர், கவியரங்க நெறியாளர், தமிழ்த் தென்றல் கவிஞர் எஸ்.எம்.அலி அக்பர், கவிஞர், சிரேஷ்ட சட்டத்தரணி ரஷீத் எம்.இம்தியாஸ், வலம்புரி கவிதா வட்டம் செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், புத்தளம் இஸ்லாஹிய்யா மகளிர் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எச்.எம். மின்ஹாஜ் (இஸ்லாஹி) ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கௌரவ அதிதிகளாக கவிஞர், பன்னூலாசிரியர் கலாபூஷணம் ஜவாத் மரிக்கார், கவிஞர், நாடகக் கலைஞர் அப்துல் லதீப், இலங்கை நெய்னார் சமூகநலக் காப்பகம் தலைவர் நெய்னார் இம்ரான், எழுத்தாளர், பன்னூலாசிரியர் ஸாக்கிரா இஸ்ஸதீன், அரசாங்க தகவல் திணைக்கள முன்னாள் தகவல் அதிகாரி கலாபூஷணம் நூருல் அய்ன், சங்கக்கவி கிண்ணியா அமீர் அலி ஆகியோர் கலந்துகொண்டனர்.




















## 'கீறல்' சஞ்சிகை அறிமுக விழா

■ அஸ்லம் எஸ்.மௌலானா





தேசிய வாசிப்பு மாதத்தை (2024 ஒக்டோபர்) முன்னிட்டு, மருதமுனை பொது நூலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட சிறப்பு நிகழ்வுகளில் ஓர் அங்கமாக 'கீறல்' சஞ்சிகையின் 11ஆவது இதழ் அறிமுக விழா ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெற்றது.

இந்நிகழ்வில், கவிஞரும் விமர்சகருமான ஜெஸ்மி மூஸா, வாசகர் வட்டத்தின் தலைவர் கவிஞர் விஜிலி மூஸா, எழுத்தாளர்களான ரகுமான் ஏ.ஜமீல், டீன் கபூர், கல்முனை சமீம், எஸ்.ஏ.கப்பார், இசட்.எம்.நிலாம் நழீமி, மாஜிதா தௌபீக், நிஷா இஸ்மாயில், ஜெசிமா முஜீப், பத்ரு நிஷா, சுமையா ஜெஸ்மி, எஸ்.முன்சிலா, மலீஸ் அமீன் மற்றும் நூலக உத்தியோகத்தர்கள், வாசகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



## 'கந்தபுராண அமிர்தம்' நூல் வெளியீட்டு விழா




■ வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலய முன்னாள் வண்ணக்கரும், பிரபல புராண பயனிகருமான கலாபூஷணம் தம்பிமுத்து மகேந்திரா எழுதிய 'கந்தபுராண அமிர்தம்' என்ற நூல் வெளியீட்டு விழா திருக்கோவில் ஆலயத்தில் சனிக்கிழமை (02) நடைபெற்றது.
















## 'திருப்புமுனை அரசியல்' நூல் வெளியீடு

■ எஸ்.கணேசன்

தலவாக்கலை-வட்டகொடை மடகொம்பரையிலிருந்து மக்கள் மன்றத்திற்கு - 'திருப்புமுனை அரசியல்' எனும் நூல் வெளியீடு சனிக்கிழமை (02) ஹட்டன் DKW மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவர் மயில்வாகனம் உதயகுமார், தமிழ் முற்போக்கு கூட்டணியின் முன்னாள் பொதுச்செயலாளர் சந்திரா சாப்டர், மலையக மக்கள் முன்னணியின் பிரதி தலைவர் ராஜாராம், பொதுச்செயலாளர் பேராசிரியர் விஜயசந்திரன் உட்பட ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.


























### இலங்கையில் University of East London பல்கலைக்கழகத்தின்

# புதிய சந்தை கூட்டாளராக 'Infinite Group' மாறியுள்ளது

University of East London (UEL) பல்கலைக்கழகத்துடனான கூட்டாண்மை மூலமாக அதன் முகவர் கூட்டாண்மைகள் மற்றும் நுழைவு பதிவு நடைமுறைகளை நிர்வகிப்பதில் இலங்கையில் அதன் உத்தியோகபூர்வ பிரதிநிதியாக மாறியுள்ளமை குறித்து Infinite Group அறிவித்துள்ளது. இலங்கை முகவர்கள் UEL இன் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் குறித்து நெருக்கமாக இணைந்து செயற்பட்டு, விண்ணப்ப சேவைகளை சீரமைத்து, வெளிநாட்டில் உயர் கல்விக்கான வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கு இந்த ஒத்துழைப்பு வழிவகுக்கும்.


பவேல் பாவா (University of East Londonஇன் சர்வதேச ஆட்சேர்ப்பிற்கான பிரதித் தலைவர், தெற்காசியா)


கௌரவ் பாட்ரா (ஸ்தாபகர்/பிரதம நிறைவேற்று அதிகாரி, Infinite Group)

இக்கூட்டாண்மை குறித்து UEL இன் சர்வதேச ஆட்சேர்ப்பிற்கான பிரதித் தலைவர், தெற்காசியா பவேல் பாவா அவர்கள் கருத்து வெளியிடுகையில், "இலங்கையில் வெளிநாட்டுக் கல்விக்கான மோகம் அதிகரித்து வருகின்ற ஒரு காலகட்டத்தில் Infinite Group உடன் எமது கூட்டாண்மை ஏற்படுத்தப்பட்டுள்ளது. உயர் கல்வித் தராதரங்கள், கலாசார பன்மைத்துவம், மகத்தான தொழில்வாய்ப்புக்கள் காரணமாக இலங்கை மாணவர்கள் விரும்பி நாடுகின்ற நாடுகளில் ஒன்றாக ஐக்கிய இராச்சியம் தொடர்ந்தும் காணப்படுகின்றது. தற்போது ஒட்டுமொத்த நடைமுறைக்கும் Infinite Group அனுசரணையளிப்பதால், UELக்கு இலகுவாக விண்ணப்பித்து, தமது கல்விப் பயணங்களை ஆரம்பிப்பதற்கு மாணவர்களால் முடியும்" என்று குறிப்பிட்டார்.

சர்வதேச தொழிற்சந்தையின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தனது கற்கைநெறிகளை மாற்றிக்கொள்ளும் ஆற்றலுக்காக UEL பிரபலமானது. வேலைவாய்ப்பு தொடர்பான பலன்களுக்காக முதல் 10% களுக்குள் இடம்பிடித்துள்ள பல்கலைக்கழகங்கள் மத்தியில் இதுவும் காணப்படுவதுடன், தொழிற்சந்தையில் சிறப்பாக பரிணமிக்கும் பட்டதாரிகளை உருவாக்குவதற்குப் பிரபலமானது. மேலும், மாணவர்களின் தொடக்க வணிக முயற்சிகள் மற்றும் சமூக வர்த்தகத்திற்கு ஐக்கிய இராச்சியத்தில் நான்காவது ஸ்தானத்தில் காணப்படுகின்றது. (மூலம்: HEBCI2022). தொழில்களில் வெற்றி காண்பதற்குத் தேவையான திறன்களை தனது மாணவர்கள் பெற்றுக்கொள்வதை UEL உறுதி செய்கின்றது. UEL வழங்கும் பிரபலமான கற்கைநெறிகளில் Health Sciences (MSc Public Health, Sports and Exercise Science), Business and Finance (MBA, MSc Finance and Risk), Law Justice, and Policing (LLM Business and Financial Law Human Rights Advocacy), Psychology (Ranked third in London by the Guardian University Guide 2025), Engineering and Built Environment (MSc Construction Engineering Management, Structural Engineering), Computer Science and AI (MSc Artificial Intelligence, Data Science) and Education Studies (MA Special Educational Needs, PGCE Primary/Secondary) போன்றவை அடங்கியுள்ளன.

இலங்கையிலுள்ள மாணவர்கள் UEL இல் தமது கற்கைநெறிகளை மேற்கொள்வதற்கு உதவ, விண்ணப்பங்களின் நடைமுறை தொடர்பில் இலங்கையிலுள்ள கல்வி ஆலோசகர்களுக்கு பிரத்தியேகமான தீர்வுகளை Infinite Group வழங்குகின்றது. Infinite Group இன் ஸ்தாபக பிரதம நிறைவேற்று அதிகாரி கௌரவ் பாட்ரா அவர்கள் நிகழ்வில் உரையாற்றுகையில், "நுழைவு விண்ணப்பங்களின் தேவைப்பாடுகளை விளங்கிக் கொள்வதற்கு மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதை நாம் உறுதி செய்வதுடன், ஆங்கில மொழி தேர்ச்சி மட்டம் மற்றும் கற்கைநெறி குறித்த தகமைகள் தொடர்பிலும் தனித்தனியாக ஆலோசனைகளை வழங்குகின்றோம். விண்ணப்ப நடைமுறை விரைவுபடுத்தப்படுவதுடன், பல்கலைக்கழகங்களிலிருந்து வழங்கல் கடிதங்கள் வழக்கமாக 24–48 மணி நேரத்தினுள் விநியோகிக்கப்படுகின்றன. மாணவர்கள் தமது கல்விசார்ந்த இலட்சியங்களில் கவனம் செலுத்துவதை உறுதி செய்து, அழுத்தங்களின்றி நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் Infinite Group அவர்களுக்கு வழிகாட்டுகின்றது," என்று குறிப்பிட்டார்.

அனைவருக்கும் கல்வி வாய்ப்புக் கிடைக்க வேண்டும் என்பதில் University of East Londonஅர்ப்பணிப்புடன் உள்ளமையால், நிதியியல் முட்டுக்கட்டைகளைக் குறைக்க உதவுவதற்காக பல்வகைப்பட்ட புலமைப்பரிசில் திட்டங்களையும் வழங்குகின்றது. Infinite Group உடனான கூட்டாண்மை மூலமாக, தமது கற்கைகளுக்கு நிதியுதவியாக பிரத்தியேகமான புலமைப்பரிசில்களுக்கு இலங்கை மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும். பட்டப்படிப்புக்களை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு உதவுவதற்காக 2023 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில்களுக்காக 2.2 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்டு தொகையை UEL ஒதுக்கியிருந்ததுடன், சர்வதேச மாணவர்களுக்கு கட்டுபடியாகும் வகையில் கல்வி கிடைக்கப்பெறுவதை உறுதி செய்தது. இலங்கை மாணவர்கள் தாம் தெரிவு செய்கின்ற கற்கைநெறியைப் பொறுத்து, 2,500 ஸ்ரேலிங் பவுண்டு தொகை வரையான புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இந்த நிதியுதவிகள் இலங்கை மாணவர்களை ஈர்க்கின்ற தெரிவாக UEL ஐ மாற்றியுள்ளதுடன், நிதி நெருக்கடிகளின்றி உயர் தர கல்வியை மேற்கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றன.

மகத்தான கல்வியை வழங்குவதில் University of East Londonமிகவும் பெயர்பெற்றது. கற்பித்தல் தரத்திற்காக 2025 ஆம் ஆண்டின் மிகச் சிறந்த பல்கலைக்கழகமாக இது Times and Sunday Times Good University Guide ஆல் பெயரிடப்பட்டது. 2024 க்கான தேசிய மாணவர் ஆய்வில் (National Student Survey) மாணவர் அனுபவத்திற்காக இலண்டனில் 1ஆவது ஸ்தானத்தில் UEL தரப்படுத்தப்பட்டதுடன், கற்பித்தலில் திருப்தி குறித்து தேசியரீதியில் 21ஆவது ஸ்தானத்தைப் பெற்றுள்ளது. மேலும், UEL இன் ஆய்வில் 55% ஆனவை 2021 Research Excellence Framework ஆல் 'world–leading' அல்லது 'internationally excellent' ஆக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இப்பிரத்தியேக கூட்டாண்மை மூலமாக, கல்வி மற்றும் ஆய்வு மகத்துவத்திற்காக வலுவான நன்மதிப்புடன், சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றுக்கான அனுமதியை இலங்கை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும். UEL இல் கற்பது மாணவர்களுக்கு தமது தனிப்பட்ட மற்றும் தொழில்சார் விருத்தியை மேம்படுத்த வாய்ப்பளிப்பதுடன், சர்வதேச தொழிற்சந்தையில் வெற்றி காண்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ள உதவுகின்றது. எவ்வாறு விண்ணப்பிப்பது என்பது குறித்த மேலதிக தகவல் விபரங்களை அறிந்துகொள்ள, தனிப்பட்ட வழிகாட்டல் மற்றும் உதவிக்காக Infinite Group ஐத் தொடர்புகொள்ளுமாறு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர்.


அபிஷேக் குமார் (உள்நாட்டு தலைமை அதிகாரி, ஐக்கிய இராச்சியம், Infinite Group), அஞ்சலி களுபோவில (பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர், இலங்கை, Infinite Group), சதீஷ் போல் (உள்நாட்டு முகாமையாளர், இலங்கை, Infinite Group)









## ஆயுர்வேத தினம்

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் 9வது ஆயுர்வேத தினத்தை 2024 நவம்பர் 1ஆம் திகதி கொழும்பில் கொண்டாடியது. இந்திய உயர் ஸ்தானிகர் எச்.இ.சந்தோஷ் ஜா, கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் எச்.டி கருணாரத்னவுடன் பல்கலைக்கழகத்தின் புதிய கலை அரங்கில் ஆரம்பித்து வைத்தார்.

## இந்தியாவின் உதவிப் பொதி

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் எச்.இ.சந்தோஷ் ஜா, திருகோணமலை மீனவர் தொழிற்சங்கத்தில் நவம்பர் 03ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மீனவ சமூகத்திற்கு அபிவிருத்தி உதவிப் பொதியைக் கையளித்தார்.















உத்திர பிரதேசம்

உத்திர பிரதேசத்தில் கோர விபத்து:

# 28 பேர் பலி

உத்தர பிரதேச மாநிலம் அல்மோரா மாவட்டத்தில், திங்கட்கிழமை (4) காலை 9 மணியளவில், சுமார் 40 பேருடன், சென்ற பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 28 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

உத்தர பிரதேச மாநிலம் அல்மோராவில் உள்ள மார்ச்சுலாவின் சால்ட் பகுதியில் பஸ் சென்றபோது, திடீரென பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கவும், காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்க்கவும் பொலிஸார், தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர், மாநில பேரிடர் மீட்புக்குழுவினர் அப்பகுதிக்கு விரைந்துள்ளனர்.

உத்தரகாண்ட் மாநில முதல்வர் புஷ்கர் சிங் தாமி, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார். காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

மேலும், "பஸ் விபத்து ஏற்பட்ட 28 பேர் உயிரிழந்தது செய்தி மிகவும் கவலையளிக்கும் செய்தி. துரித மீட்புப்பணிக்கு உத்தரவிட்டுள்ளேன்" எனவும் தெரிவித்துள்ளார்.



சபரிமலையில் மீண்டும்

## ஸ்பாட் புக்கிங் வசதி அறிமுகம்

மண்டல பூஜை, மகர விளக்கு காலத்தை முன்னிட்டு, பக்தர்கள் கூட்டம் அதிகரிக்கும் என்பதால், சபரிமலையில் மீண்டும் ஸ்பாட் புக்கிங் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது

இந்த ஆண்டு மண்டல பூஜை டிசம்பர் 26ஆம் திகதியும், மகர விளக்கு பூஜை வருகிற ஜனவரி 14ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் திருவிதாங்கூர் தேவசம்போர்டு மற்றும் கேரள மாநில அரசு சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், மண்டல பூஜை, மகர விளக்கு காலத்தை முன்னிட்டு, பக்தர்கள் கூட்டம் அதிகரிக்கும் என்பதால் சபரிமலையில் மீண்டும் ஸ்பாட் புக்கிங் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பம்பை, எருமேலி, பீர்மேடு ஆகிய இடங்களில் ஸ்பாட் புக்கிங் மையங்கள் செயற்படும் என்றும், ஸ்பாட் புக்கிங் மூலம் 10 ஆயிரம் பக்தர்களை அனுமதிக்க முடிவு செய்துள்ளதாகவும் கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஒன்லைனில் முன்பதிவு செய்யும் 70 ஆயிரம் பக்தர்கள் தினசரி அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




சிதம்பரம்

## சிதம்பரம் நடராஜர் கோவிலில் பதற்றம்



சிதம்பரம் நடராஜர் கோவிலில் கொடிமரத்தை மாற்ற தீட்சிதர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இதனால் அங்கு பரபரப்பான சூழ்நிலை நிலவியுள்ளது.

கொடி மரத்தை புதுப்பிக்கவோ, மாற்றவோ கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்தே, தீட்சிதர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், பட்டாச்சாரியர்கள் மற்றும் தீட்சிதர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து போக செய்துள்ளனர்.

இச்சம்பவத்தால், நடராஜர் கோவில் வளாகத்தில் 50க்கும் மேற்பட்ட பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

புதிய கொடிமரம் மாற்ற திங்கட்கிழமை (4) காலை, வருகை தந்த அறநிலையத்துறை அதிகாரிகளுடன், தீட்சிதர்கள் வாக்குவாதம் செய்துள்ளனர்.

கொடி மரத்தை தற்போது உள்ளதை போல் மாற்றுவதை எதிர்க்கவில்லை, புதிதாக வளையம் போன்றவை வைப்பதை எதிர்க்கிறோம் என்று தீட்சிதர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதையடுத்து, கொடிமரம் தற்போது உள்ள நிலையிலேயே திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என எழுத்து மூலமாக தீட்சிதர்களுக்கு ஒப்புதல் கடிதம் அளிக்க கோவிந்தராஜபெருமாள் கோவில் அறங்காவலர்கள் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

காற்று மாசு: ஒரு வாரத்துக்கு

## ஆரம்ப பாடசாலைகளுக்குப் பூட்டு

பாக்கிஸ்தானின் இரண்டாவது பெரிய நகரமான லாகூரில், காற்றிரன் தரம் மோசமடைந்துள்ளதால், ஒரு வாரத்திற்கு ஆரம்பப் பாடசாலைகளை மூடுவதற்கு, அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.


14 மில்லியன் மக்கள் வசிக்கும் இந்த நகரம் பல நாட்களாக புகைமூட்டம், குறைந்த தர டீசல் புகை, பருவகால விவசாய எரிப்பு மற்றும் குளிர்கால குளிர்ச்சி ஆகியவற்றால் ஏற்படும் மூடுபனி மற்றும் மாசுகளின் கலவையால் சூழப்பட்டுள்ளது.

IQAirஇன் தரவுகளின்படி, காற்றின் தரக் குறியீடு, சனிக்கிழமையன்று (2) 1,000ஐத் தாண்டியுள்ளது. இந்த அளவு ஆபத்தானது என்று கருதப்படும் 300 அளவை விட அதிகமாக உள்ளது.

பஞ்சாப் அரசாங்கமும் ஞாயிற்றுக்கிழமை (3), 1,000க்கும் அதிகமான உச்சங்களை பதிவு செய்தது. அடுத்த 6 நாள்களுக்குக் காற்றின் தரத்தில் மாற்றம் இருக்காது என்று வானிலை முன்னறிவிப்பு காட்டுகிறது.


அதனால் ஆரம்ப பாடசாலைகளை மூடுவதற்கு முடிவெடுக்கப்பட்டதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், பாடசாலைகளில் முகக்கவசம் அணியப்பட வேண்டும் என்றும் பாகிஸ்தான் அரசாங்கம் தெரிவித்துள்ளது.



இந்தோனேசியா

## எரிமலை வெடித்ததில் 9 பேர் பலி



இந்தோனேசியாவின் நுசா டெங்கரா மாகாணத்தின் பிளோர்ஸ் தீவில் உள்ள எரிமலை, ஞாயிற்றுக்கிழமை (3) இரவு, திடீரென வெடித்து சிதறியதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் தகவலறிந்து விரைந்து சென்ற மீட்புக்குழுவினர், காயமடைந்தவர்களை மீட்டுள்ளனர். அதேவேளை, எரிமலை தொடர் சீற்றத்துடன் காணப்படுவதால், மக்களை பாதுகாப்பான பகுதிக்கு அழைத்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

மேலும், அப்பகுதியில் உள்ள கிராமங்களை எரிமலையில் இருந்து வெளிவந்த கரும்புகை சூழ்ந்துள்ளதுடன், எரிமலையில் இருந்து தீக்குழம்பு வெளிவந்த வண்ணம் உள்ளது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் யுனைட்டெட் செல்சி போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நடைபெற்ற செல்சியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைட்டெட் சமப்படுத்தியது.

யுனைட்டெட் சார்பாகப் பெறப்பட்ட கோலை ப்ரூனோ பெர்ணாண்டஸ் பெற்றதோடு, செல்சி சார்பாகப் பெறப்பட்ட கோலை மொய்ஸஸ் கைசெடோ பெற்றிருந்தார்.





இத்தாலிய சீரி ஏ தொடர்:

## நாப்போலியை வீழ்த்திய அத்லாண்டா

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (03) நடைபெற்ற அத்லாண்டாவுடனான போட்டியில் 0-3 என்ற கோல் கணக்கில் நாப்போலி தோற்றது.

அத்லாண்டா சார்பாக அடெமொலா லுக்மன் 2 கோல்களையும், மட்டியோ றெடெகுய் ஒரு கோலையும் பெற்றனர்.

இதேவேளை, ஹெலாஸ் வெரோனாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 2-3 என்ற கோல் கணக்கில் றோமா தோற்றது.




## ஏ.சி. மிலனிலிருந்து வெளியேறும் லியோ?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி. மிலனின் முன்களவீரரான ரஃபேல் லியோ, அக்கழகத்திலிருந்து வெளியேறுவது குறித்து சிந்திப்பதாகக் கூறப்படுகிறது.

மிலனுடன் 2028ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள 25 வயதான லியோ, புதிய முகாமையாளர் போலோ பொன்செகாவின் முறைமைக்குள் வரத் தடுமாறுவதாக நம்பப்படுவதுடன், நடப்புப் பருவகாலத்தின் ஒன்பது போட்டிகளில் ஒரு கோலையே பெற்றுள்ளார்.

இந்நிலையில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா மற்றும் சவுதி அரேபியக் கழகங்கள் லியோவைக் கைச்சாத்திட ஆர்வம் காட்டுகின்ற நிலையில், அவரைக் கைச்சாத்திட 175 மில்லியன் யூரோக்களை செலுத்த வேண்டியதாக உள்ளது.



## பிரேஸிலுக்குத் திரும்பும் நெய்மர்?



பிரேஸிலின் முன்களவீரரான நெய்மரின் சவூதி அரேபியக் கழகமான அல்-ஹிலாலுடனான ஒப்பந்தமானது அடுத்த பருவகாலத்தில் அவரை ஒப்பந்தம் செய்வதற்கான பேச்சுவார்த்தைகளில் அவரது முன்னாள் பிரேஸிலியக் கழகமான சன்டோஸ் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அல்-ஹிலாலில் சில போட்டிகளில் விளையாடியதைத் தொடர்ந்து காயமடைந்து ஓராண்டுக்குப் பின்னர் கடந்த மாதமே 32 வயதான நெய்மர் விளையாட ஆரம்பித்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

பிரேஸிலிய குரான் பிறீ:

# வெர்ஸ்டப்பன் முதலிடம்

பிரேஸிலிய குரான் பிறீயானது ஞாயிற்றுக்கிழமை (03) நடைபெற்ற நிலையில், பந்தயத்தை 17ஆவது இடத்திலிருந்து ஈரமான ஓடுதளத்தில் ஆரம்பித்த நடப்புச் சம்பியனான மக்ஸ் வெர்ஸ்டப்பன், பல்வேறு சம்பவங்களுக்குப் பின்னர் அபாரமாக முதலாமிடத்தைப் பிடித்தார்.

பந்தயத்தை நான்காமிடத்திலிருந்து ஆரம்பித்த அல்பைன் அணியின் எஸ்டெபன் ஒக்கோன் இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, பந்தயத்தை 13ஆம் இடத்திலிருந்து ஆரம்பித்த ஒக்கோனின் சக அணி வீரரான பியரி கஸ்லி மூன்றாமிடத்தைப் பெற்றார்.

அந்தவகையில் இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 393 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் றெட் புல் அணியின் வெர்ஸ்டப்பன் காணப்படுகின்றார். 331 புள்ளிகளுடன் மக்லரென் அணியின் லான்டோ நொரிஸ் காணப்படுவதோடு, 307 புள்ளிகளோடு பெராரி அணியின் சார்ள்ஸ் லெக்கலெர்க் மூன்றாமிடத்தில் காணப்படுகின்றார்.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 05 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.